Registered as a news paper.

பொதுசன நூலகம்
21 JUN 2004
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும்,
அலுவலக
உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 222 5392

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 02 (21.06.2004) திங்கட்கிழமை இதழ் :262



வவுனியாவில் நேற்று நடைபெற்ற இரு சிங்கள நூல்களின் வெளியீட்டு விழாவில், கே.பேணாட்டிடமிருந்து முதற்பிரதியை ஜெயதிலக பண்டார பெறுவதையும், பேராசிரியர் சுசரித ஹம்லத்துக்கு புதுவை இரத்தினதுரையும், ஜெயதிலக பண்டாரவுக்கு வே.பாலகுமாரனும் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# புதிய தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டம்!

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாத நிலையில் இருப்பதால் - புதிய தேர்தலை நடத்தி அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்று இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டபோதும் இதுவரை நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவில்லை.

பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கமுடியாமல் உள்ள ஆளும் கட்சி தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தி இறுதிக்கட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனையின்படி, நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம மற்றும் அமைச்சர்களான மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரைக் கொண்ட குழு நாடாளுமன்ற பெரும்பான்மையை உறுதிசெய்யும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

எனினும் இந்த முயற்சிகள் பெரும் வெற்றியைத் தராத நிலையிலேயே புதிய தேர்தலை நடத்தும் திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா ஆராய்ந்து வருகிறார்.

புதிய தேர்தலை தற்போதைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நேற்று பேரணி!

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு நேற்று கிளிநொச்சியில் பேரணி ஒன்று இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10.15 மணிக்கு சந்திரன் பூங்காவுக்கு அண்மையில் ஆரம்பமான பேரணி கிளிநொச்சி பொதுசன அமைப்புக்களின் ஒன்றியப் பணிமனையைச் சென்றடைந்தது.

இப்பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இதன் பின்னர் மனு கையளிக்கப்பட்டது.

முதலில் ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கான பிரதியை யு.என்.எச்.சி.ஆர். இலங்கைக்கான பிரதிநிதியிடமும், ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கான மனுக்கள் கிளிநொச்சி அரச அதிபரிடமும், கையளிக்கப்பட்டது.

## கிழக்குக்கான கடற்பயணத்தை புலிகள் இன்று மேற்கொள்வர்!

(கொழும்பு)

வடக்கிலிருந்து 90 புலிகள் இன்று கிழக்குக்கான கடற்பயணத்தை

## கருணாவின் செயற்பாடு பிடிக்காததால்

# புலிகள் இன்று மேற்கொள்வர்!

(கொழும்பு)

வடக்கிலிருந்து 90 புலிகள் இன்று கிழக்குக்கான கடற்பயணத்தை மேற்கொள்ளவிருப்பதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக- போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் மேலும் தெரிவிக்கையில்,

இன்று மூன்று படகுகளில் 90 புலிகள் முல்லைத்தீவிலிருந்து கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான இலக்கச்சோலைக்குச் செல்லவுள் ளனர். நாளை இந்தப் படகுகள் முல்லைத்தீவுக்குத் திரும்பிச் செல்லும்.

கடற்படையின் பாதுகாப்புடன் செல்லும் கடற்புலிகளின் படகுகளில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளும் பயணம் செய்வர்.

2002 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கும், (12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவின் செயற்பாடு பிடிக்காததால் அவரிடமிருந்து தப்பித்து வந்தோம்!

## முன்னாள் தளபதி நிலாவினி பேட்டி

இராணுவத்தினரின் பாதுகாப்பில் கருணாவுடன் இருந்த நாம், அவரது நடவடிக்கைகள் பிடிக்காததால் - அங்கிருந்து தப்பிவந்து புலிகளுடன் இணைந்து கொண்டதாக, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட முன்னாள் மகளிர் சிறப்புத் தளபதி நிலாவினி பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கருணா அணியிலிருந்து தப்பி வந்த அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டதாவது -

*கேள்வி:* கருணா அணியில் இருந்து விலகி விடுதலைப் புலிகள் அமைப்பில் எப்போது சேர்ந்தீர்கள்?

*பதில்:* 18 ஆம் திகதி கருணாவிடம் இருந்து விலகி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்தோம்.

*கேள்வி:* எதனால், அங்கிருந்து விலகினீர்கள்?

*பதில்:* அவருடைய செயற்பாடு எங்களுக்கு முற்றாகப் பிடிக்க வில்லை. அப்பொழுது நாங்கள் எங்களை பெற்றோரிடம் ஒப்படைக்கும்படி கேட்டோம்.

அவர் நீண்டகாலமாக மறுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவுக்கு அரச படையினர் பாதுகாப்பு வழங்கவில்லையாம்!

## பாதுகாப்பு செயலர் கூறுகிறார்

(லண்டன்)

கருணாவுக்கு அரச படையினர் பாதுகாப்புக் கொடுத்து வருவதான விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டு இன்னமும் குற்றச்சாட்டு நிலையில் தான் இருக்கிறது. இது குறித்து புலிகளிடமிருந்து ஆதாரமான சாட்சியங்கள் கிடைத்தால் அது குறித்து ஆராயமுடியுமென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத தெரிவித்தார்.

பி.பி.சி சிங்கள சேவையான சந்தேசயவுக்கு சிறில் ஹேரத் அளித்த செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது,

*சிறில் ஹேரத்:-* அந்தக் குற்றச்சாட்டை முற்றுமுழுதாக மறுக்கிறேன். ஏனென்றால் இன்னமும் வெறும் குற்றச்சாட்டு என்ற நிலையில்தான் இருக்கிறது.

அந்தக் குற்றச்சாட்டுப் பற்றி விடுதலைப் புலிகளிடமிருந்து ஆதாரமான சாட்சியம் அவர்களிடமிருந்து வந்தால் அதை விசாரித்து உண்மையா? இல்லையா? என்பதை ஆராயமுடியும். அதற்கு அவர்கள் ஏதாவது நம்பத்தகுந்த ஆதாரத்தை எங்கள் முன் வைக்கவேண்டும்.

*சந்தேசய :-* இலங்கை அரசாங்கம் கருணாவைப் பயன்படுத்தி தங்களுக்கு எதிராகப் போரை நடத்த முயல்வதாக குற்றம்சாட்டியிருக்கின்றனரே?

*சிறில் ஹேரத் :-* இல்லை. ஏனென்றால் இலங்கை அரசாங்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. நகரில் கரையொதுங்கிய இளைஞர் ஒருவரினது சடலம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - செட்டிப்பாளையம கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியது.

இந்தச் சடலம் குறித்து, களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு பொது மக்கள் கொடுத்த தகவலையடுத்து, அவ்விடத்திற்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஏ.எச்.எம்.அஜ்மீர், சடலத்தைப் பார்வையிட்டதுடன் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பிப் பிரேதபரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ரி-சேட், காற்சட்டை அணிந்து, இடுப்பில் பெல்ட் கட்டிய நிலையில் இச்சடலம் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# கரும்புலிகள் நாள் 2004 – யூலை 05 ஐ முன்னிட்டு

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அதன் சங்கங்களும், கரைத்துறைப் பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லை நகர் புனரமைப்புக்குழு, முல்லைப் பட்டின வர்த்தகர் சங்கம், ப.தெ.வ.அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும்.

# மாபெரும் விளையாட்டுப் போட்டி

நிகழ்வுகளின் விபரமும் அது நடைபெறும் திகதிகளும் - 2004.07.02 - 2004.07.05

| | விளையாட்டு | திகதி/நேரம் | பரிசில்கள் |
|---|---|---|---|
| 1. | முன்பள்ளி சிறார்களுக்கானது | - 2004.07.02 மாலை 4.00 - 5.00 வரை | 1000/= பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் |
| 2. | தலையணைச்சண்டை (ஆண்) | - 2004.07.02 மாலை 5.00 - 6.00 வரை | 1 ஆவது பரிசு - RX ரேப் செற்<br>2 ஆவது பரிசு - ரேப் செற் |
| | தலையணைச்சண்டை (பெண்) | - 2004.07.02 மாலை 5.00 - 6.00 வரை | 1 ஆவது பரிசு - RX ரேப் செற்<br>2 ஆவது பரிசு - ரேப் செற் |
| 3. | கபடி (ஆண்) | - 2004.07.02 மாலை 6.00 - 11.00 வரை | 1 ஆவது பரிசு - ரூபா 7500/- பெறுமதிக்குரிய உடைகள்.<br>2 ஆவது பரிசு - ரூபா 5000/- பெறுமதிக்குரிய உடைகள். |
| | கபடி (பெண்) | - 2004.07.02 மாலை 6.00 - 11.00 வரை | 1 ஆவது பரிசு - ரூபா 7500/- பெறுமதிக்குரிய உடைகள்.<br>2 ஆவது பரிசு - ரூபா 5000/- பெறுமதிக்குரிய உடைகள். |
| 4. | கயிறு இழுத்தல் (ஆண்) | - 2004.07.03 மாலை 4.00 - 6.00 வரை | 1 ஆவது பரிசு - 7000/- பெறுமதிக்குரிய ஆட்டுக் கடா.<br>2 ஆவது பரிசு - 5000/- பெறுமதிக்குரிய ஆட்டுக் கடா. |
| | கயிறு இழுத்தல் (பெண்) | - 2004.07.03 மாலை 4.00 - 6.00 வரை | 1 ஆவது பரிசு - 7000/- பெறுமதிக்குரிய ஆட்டுக் கடா.<br>2 ஆவது பரிசு - 5000/- பெறுமதிக்குரிய ஆட்டுக் கடா. |
| 5. | குத்துச்சண்டை (தெரிவு விளையாட்டு) | - 2004.07.03 மாலை 6.00 - 11.00 வரை | 1 ஆவது பரிசு - 1/2 பவுனும், வெற்றிக்கேடயம் 1<br>2 ஆவது பரிசு - 1/4 பவுண் |
| 6. | மல்யுத்தம் | - 2004.07.03 மாலை 6.00 - 11.00 வரை | 1 ஆவது பரிசு - 1/2 பவுனும், வெற்றிக்கேடயம் 1<br>2 ஆவது பரிசு - 1/4 பவுண் |
| 7. | குத்துச்சண்டை/ மல்யுத்தம் (இறுதித் தெரிவு) | - 2004.07.04 மாலை 4.00 - 11.00 வரை | - - - - - - - - |
| 8. | நீச்சல் போட்டி (2 கடல் மைல் தூரம்) | - 2004.07.05 காலை 6.00 - 9.00 வரை | 1 ஆவது பரிசு - ஒரு பவுண் (மெடல்)<br>2 ஆவது பரிசு - 1/2 பவுண் (பதக்கம்)<br>3 ஆவது பரிசு - 1/4 பவுண்<br>4 ஆவது பரிசு - 2000/= பெறுமதிக்கான கதிரை<br>5 ஆவது பரிசு - 2000/= பெறுமதிக்கான கதிரை |
| 9. | படகோட்டம்<br>I. முன் கியர்உள்ள வெளிஇணைப்பு இயந்திரம் 9.9 15 கோஸ் பவர்<br>II.. சைற் கியர் உள்ள வெளி இணைப்பு இயந்திரம் 9.9 15 கோஸ் பவர்<br>II.. சுசுக்கி வெளி இணைப்பு இயந்திரம் 9.9 15 கோஸ் பவர் | - 2004.07.05 காலை 9.00 மணி தொடக்கம் | 1 ஆவது பரிசு - ரூபா 5000/- பெறுமதிக்குரிய வலை<br>2 ஆவது பரிசு - ரூபா 4000/- பெறுமதிக்குரிய வலை<br>3 ஆவது பரிசு - ரூபா 3000/- பெறுமதிக்குரிய வலை<br>4 ஆவது பரிசு - ரூபா 2000/- பெறுமதிக்குரிய வலை<br>5 ஆவது பரிசு - ரூபா 1000/- பெறுமதிக்குரிய வலை |
| 10 | பாடசாலைப் போட்டி - பாடசாலை ரீதியாக நடைபெறும் | | |

மேற்குறிப்பிட்ட விளையாட்டுக்களில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் அனைவரும் குறித்த விளையாட்டு நடைபெறும் திகதிகளில் கீழ் குறிப்பிடும் இடத்தில் உடன் பதிவை மேற்கொண்டு, விளையாட்டுக்களில் பங்கு பற்றலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவு மேற்கொள்ளும் இடம் :
**சுற்றுலாமையம்,**
**கடற்கரை,**
**முல்லைத்தீவு.**

தகவல் :
அ.மரியராசா,
தலைவர்,
மு.மா.க.தொ.கூ.ச.சமாசம்,
முல்லைத்தீவு

(சி-2679)

# பதவிநீக்கப்பட்ட கடற்படை அதிகாரியை மீளச் சேவையில் இணைக்க உத்தரவு!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

கடற்படையின் இளநிலை அதிகாரி ஒருவரை மீளவும் சேவையில் இணைத்துக்கொள்ளும்படி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் பணித்துள்ளது.

கடற்படை இளநிலை அதிகாரியாகவிருந்த ஒருவர் தம்மை பதவியிலிருந்து நீக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான பதவியுயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும்கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவரால் விசாரிக்கப்பட்ட பின்னரே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த அதிகாரியை பெற்றி ஒபிசராக நியமித்து முன்னைய சம்பளங்களை வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது.

கடற்படையின் 'கெமுனு' கப்பலில் கட்டளை அதிகாரியான கப்டன் டபிள்யூ.கே.எம்.என்.வீரக்கோன், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராகவே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மனுதாரர் சாதாரண கடற்படைச் சிப்பாயாக இணைந்து 1993 இல் ஏபிள் சீமன் ஆகவும், 1997 இல் லீடிங் சீமன் ஆகவும் பதவியுயர்வு பெற்றிருந்தார்.

கெமுனு கப்பலில் கடமையாற்றிய இந்த மனுதாரர், கிரிந்த கடற்படைத் தளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது கப்பலில் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்த பிஸ்டல் காணாமற்போயிருந்தது.

பின்னர் அதை இருவர் கண்டுபிடித்ததாக அறிவித்திருந்தனர்.

ஆனால், மனுதாரர் 2001 செப்ரெம்பர் 4 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு, 2002 ஜனவரி 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருடன் மேலும் ஆறு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டிருந்தபோதும், மற்றையோர் அன்றே விடுதலை செய்யப்பட, மனுதாரர் மட்டுமே விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தடுப்புக் காவலில் இருந்தபோது தான் கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டதாகவும், பல்வேறு ஆவணங்களில் பலவந்தமாகக் கையெழுத்துப் பெறப்பட்டதாகவும் மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

ஆறு நீதிமன்றங்களில் பல்வேறு சட்டங்களின் கீழ் மனுதாரர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, 120 நாட்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், கடற்படையிலிருந்து சேவைநீக்கம் செய்யப்பட்டும் உத்தரவிடப்பட்டது.

தமக்கு விதிக்கப்பட்ட தண்டனை நீதியற்றதென்றும், தன்னை மீளவும் கடற்படையில் இணைந்து பணியாற்ற உத்தரவிடவேண்டும் எனக்கோரி மனுதாரர் மேன்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்தே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# நாடாளுமன்ற நடவடிக்கைகளை குழப்ப அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது!

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருவதாக, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி ஆறு மாகாணசபைகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கூட்டமொன்று கண்டியில் நடைபெற்றபோது, பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் -

நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்ப அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை முறியடிக்க சகல கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்தபோதே, ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மாகாணசபைத் தேர்தல்களை பகிஷ்கரிப்பதற்கு வேடுவர் முடிவு!

(கொழும்பு)

அடுத்தமாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கப்போவதாக ஊவா மாகாணத்திலுள்ள வேடுவர்கள் அறிவித்துள்ளனர்.

ஊவா மாகாணத்தில் மஹியங்கனையில் ஆயிரக்கணக்கான வேடுவ இனத்தவர்கள் வாழ்ந்துவருகின்றனர்.

மாகாணசபைத் தேர்தலால் தமது வாக்குகளைப் பெறும் அரசியல் கட்சியினர் தமது நலன்கள் குறித்து கவனம் எடுப்பதில்லை என்றும், இந்தத் தேர்தல் மூலம் தாம் எந்த நன்மையும் அடையவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதனால் தாம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஊவா மாகாணத்தில் நடைபெறும் மாகாணசபைத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த மாகாணத்தில் போட்டியிடும் அரசியற்கட்சிகளின் வெற்றியை இவர்களது வாக்குகள் தீர்மானிக்கும் நிலை இருந்துவருவதாகக் கூறப்படுகிறது.

இந்த இனத்தைச்சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. (01)

## இடைக்கால நிர்வாக யோசனை

# ஆளுங்கட்சி எம்.பிக்களின் கருத்தறிய ஜனாதிபதி திட்டம்!



விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைகளின் விபரங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை அறிவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம்வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இடைக்கால நிர்வாகசபை அமைப்பதை அடிப்படையாகக்கொண்டு சமாதானப் பேச்சக்களை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருபபதனால், அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னர், முன்னணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஒரு பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்த உதவுமாறு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதியின் நெருங்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

# பட்டதாரிகள் நியமனத்தின்போது அரசியல் தலையீடு இருக்காது!

## நிதியமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு நியமனங்களில் கல்வித் தகைமை மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். இதில் எந்த அரசியல் தலையீடுகளும் இருக்காது என்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புத் திட்டம் தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

முகாமைத்துவ பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பட்டதாரிகளுக்கு இரண்டுவருட பயிற்சிக்காலத்தில் மாதாந்தம் ஆறாயிரம் ரூபாவை சம்பளமாக வழங்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி சுமார் 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்பபு வழங்கப்படவுள்ளது. பொதுச சேவைக்குள் இவர்களை இணைதது்கொள்வதற்கான நடவடிககைகள் இந்தவருட இறுதிக்குள் முடிவடையும். நாடு முழுவதும் வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் தொடர்பான பட்டியலை பூர்த்திசெய்யும் நடவடிக்கைகள் இந்த மாத்திற்குள் பூர்த்தியடையும்.

பட்டதாரிகள் இரணடுவருட பயிறசிக் காலத்தில் இணைக்கப்படுவது குறித்து சிலர் வதந்திகளைப் பரப்பி, இந்தப் பட்டதாரிகளை தவறாக வழி நடத்தமுறபடுகின்றனர்.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திடடத்தின் ஒரு கட்டமாகவே வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நடவடிக்கை மூலம் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சனைகள் மட்டுமே தீர்க்கப்படுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கதிர்காமத்தில் பொலித்தீனுக்குத் தடை

எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் கதிர்காமம் உற்சவத்தின்போது திருவிழாக் காலங்களில் பொலித்தீன் உறைகள் எடுத்துச்செல்ல தடைவிதிக்கப் பட்டுள்ளதாக மொனராகல பிரதேச செயலர் ஜி.எஸ்.எதிரிவீர தெரிவித்தார். கடந்த காலங்களில் பொலித்தீன் உறைகள் பாவிக்கப்பட்டதன் காரணமாக வணக்கஸ்தலம், மாணிககங்கை என்பன பெருமளவில் அசுத்தமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாகாணசபைத் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தயார்!

## பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பொலிஸ் திணைக்களம் பூர்த்தி செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தேர்தல் நடவடிக்கைகளுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன கருத்துத் தெரிவிக்கையில் -

தேர்தல் சட்டங்களை மீறியதற்கான குற்றச்சாட்டின்பேரில் இது வரை 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகள் முடிவடைந்து நீதிமன்றங்களில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.

இவர்கள் தேர்தல் சட்டத்திற்கு முரணான வகையில் சுவரொட்டிகளை வெளியிடங்களில் ஒட்டுவதற்கு எடுத்துச் சென்றபோதே கைது செய்யப்பட்டனர்.

தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவதற்காக 88 இலட்சம் ரூபாவை தேர்தல் திணைக்களம் வழங்கியிருந்தது.

மாகாணசபைத் தேர்தல் பாதுகாபபுக் கடமைக்காக வடக்கு - கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் கடமையாற்றும் பொலிஸாரில் ஒரு பகுதியினர் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் தேர்தல் நடைபெறும் 26 பொலிஸ் பிரிவுகளிலும் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவர். ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களுக்கும் மூன்று பொலிஸார் காவலில் ஈடுபடுத்தப்படுவதுடன், மேலதிகமாக ஆயுதம் தாங்கிய ரோந்து அணி வீதிச்சோதனைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக மூன்று பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பொறுப்பாக நியமிக்கபபடடுள்ளனர். தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன, குற்றவியல் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்ரமரத்ன, தொடர்பாடலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த ஜெயசூரிய ஆகியோரின் பொறுப்பிலேயே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இன்று சந்திப்பு

அரசாங்க ஊழியரது ஊதியங்கள் இதுவரை அதிகரிக்கப்படாமை தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து 18 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி ஆராயவுள்ளன.

இந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

அரசாங்க சேவை தொழிற்சங்கங்களின் சம்மேளனத் தலைவர் டபிள்யூ.எச்.பியதாஸவினால் இந்த தொழிற்சங்க சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# மீன்பிடித்துறை அபிவிருத்திக்கு அரசு நடவடிக்கை எடுக்கும்!

## அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க

(கொழும்பு)

மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய மீன்பிடி மற்றும் கடல்வளத் துறை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக மீன்பிடி மற்றும் கடல்வளத்துறை அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டின் கடல்வள உற்பத்திகளை அதகரிப்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இலங்கையில் ஒருவர் ஆண்டுதோறும் 17 கிலோகிராம் மீன் உணவைச் சராசரியாக உண்கிறார். ஏனைய நாட்டவர்களுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறைவான அளவாகும்.

இலங்கை ஆண்டுதோறும் 45 ஆயிரம் மெற்றிக்தொன் கருவாட்டினையும், 20 ஆயிரம் தொன் மீன்களையும் இறக்குமதி செய்கிறது.

மீன்பிடிக் கைத்தொழிலில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து அபிவிருத்திசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வேட்டைத் துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் கைதானார்!

(வவுனியா)

வவுனியாவுக்கு வடமேற்காக 11 கிலோமீற்றர் தொலைவிலுள்ள புதுக்குளத்தில், வேட்டைத்துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் ஒருவரைப் படையினரும், பொலிஸாரும் இணைந்து கைதுசெய்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில் -

புதுக்குளம் பகுதியில், கடந்த வியாழக்கிழமை இரவு 9.50 மணியளவில் ரோந்து சென்ற படையினரும், பொலிஸாரும் வேட்டைத் துப்பாக்கியுடன் சென்ற ஒருவரைக் கைது செய தனர்.

சாஸ்திரிகூழாங்குளத்தைச் சேர்ந்த மாடசாமி சின்னராசா என்ற 46 வயதுடைய குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டவராவார்.

கைதான குடும்பஸ்தர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப பட்டுள்ளதாகவும், படை வட்டாரங்கள தகவல் வெளியிட்டன.

இதேவேளை - வேட்டைக்குச் சென்றபோதே இந்தக் குடும்பஸ்தரைப் படையினர் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காலிறுதிக்குள் நுழையுமா ஜேர்மனி லத்விய அணியால் சந்தேகம்!





ஐரோப்பிய உதைபந்தாட்ட சாம்பியன் போட்டியில் 'டி' பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் லத்வியாவும், ஜேர்மனியும் மோதின. வலிமையான ஜேர்மனி அணி இந்தப் போட்டியை கோல் ஏதுமின்றி சமனிலையில் முடித்தது. இதன் மூலம் காலிறுதிக்குத் தகுதி பெறுவதில் மிகப்பெரிய நெருக்கடியை ஜேர்மனி சந்தித்தது.

அரண்போல் நின்ற லத்விய அணியின் தடுப்பு ஆட்டக்காரர்களை ஊடுருவி கோல் அடிக்க, ரூடி வொல்லரின் பயிற்சியின் கீழ் விளையாடிவரும் ஜேர்மனி அணியினர் தடுமாறிப் போயினர்.

இதனால், ஜேர்மனி அணி அடுத்து நடைபெறவுள்ள செக் குடியரசு அணிக்கு எதிரான போட்டியில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

முதற்பாதியில் லத்விய அணி ஜேர்மனிக்கு சவாலாக விளையாடினாலும், இரண்டாவது பாதியில் ஜேர்மனி அணியின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்பட்டது. லத்வியாவின் தடுப்பு ஆட்டத்தை ஜேர்மனிய வீரர்கள் ஊடுருவினாலும், கோல் எல்லைக்கு அருகில் வைத்து ஜேர்மனி அணி வீரர்கள் தடுமாறியதால், கோல அடிக்கும் பல வாய்ப்புக்கள் வீணானது.

போட்டி ஆரம்பித்த சில விநாடிகளிலேயே லத்விய வீரர் கிசாகோவிற்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. யூரோ 2004 இல் மிகக் குறைந்த நேரத்தில் எச்சரிக்கப்பட்ட வீரர் என்ற பெயரை கிசாகோவ் பெற்றார்.

ஆட்டம் தொடங்கிய எட்டாவது நிமிடத்தில் ஜேர்மனிய அணியின் பிரிங்ஸ் அடுத்ததாக கெவின்குரான்ஜி ஆகியோர் வாய்ப்புக்களை வீணடித்தனர். குறிப்பாக குரான்ஜி அடித்த ஷொட் கோல் கம்பத்தை உரசியபடி வெளியே செல்ல ஜேர்மனி ரசிகர்கள் விரக்தியின் உச்சிக்கு சென்றுவிட்டனர்.

இதனால், முதற்பாதி கோல் ஏதுமின்றி முடிந்தது. முதற்பாதியில் கற்றுக்கொண்ட பாடம் மூலம் இரண்டாவது பாதியின் ஆட்டத்தில் வேகத்தை அதிகரித்தது ஜேர்மனி.

இதனால், லத்விய அணியின் கோல் பகுதியியை ஜேர்மனி அணி வீரர்கள் தொடர்ந்து தாக்கினர். ஆனால், வாய்ப்புக்களை பயன்படுத்தத் தவறியதால், போட்டியில் வெற்றிபெற முடியாமற்போனது.

லத்வியாவும் பதிலுக்கு தைரியமாகப் போராடியது. அந்த அணியின் மாரிஸ்வெர்பாகோவ்ஸ் கிங், தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வலுவான ஷொட் ஒன்றை அடிக்க அதை ஜேர்மனியின் கோல் கீப்பர் ஒலிவர்கான் அபாரமாகத் தடுக்க லத்வியாவின் வாய்ப்புப் பறிபோனது.

முதற்பாதி முடிய பத்து நிமிடங்கள் இருந்த நிலையில் லத்விய வீரர் வேர்பாகோவ்ஸ்கிசை ஜேர்மனியின் தடுப்பு ஆட்டக்காரர்கள் முரட்டுத் தனமாகத் தடுக்க இதற்கு பெனால்டி வாய்ப்புத் தர வேர்பாகோவ்ஸ்கிங் அப்பீல் செய்தார். ஆனால், இந்தப் போட்டிக்கு நடுவராக இருந்த இங்கிலாந்தின் மைக் ரிலீ இந்த அப்பீலை மறுத்தார்.

இந்த நிலையில் 64 ஆவது நிமிடத்தில் மிகக் கடுமையான வாய்ப்பு ஜேர்மனி அணிக்கு கிடைத்தது. அந்த அணியின் மைக்கேல் பல்லாக் அடித்த ப்ரீ - கிக்ஷொட்டை லத்விய கோல்கீப்பர் கோலின்கோ தட்டிவிட்டார்.

அடுத்ததாக ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் மாற்று வீரராகக் களம் இறங்கிய மிரோஸ்லாவ் குளோஸ் தலையால் முட்டிய பந்து லத்விய கோல் கம்பத்தைஒட்டி வெளியே சென்றது. இந்த நல்ல வாய்ப்பையும் ஜேர்மனி வீணடிக்கவே ஆட்ட நேரம் முடிந்தது.

இதனால் லத்வியா - ஜேர்மனி அணிகளுக்கு இடையேயான போட்டி 0 - 0 என்ற நிலையில் கோல் எதுவுமின்றி சமனில் முடிந்தது.

# ஹொலன்ட் அணியை வீழ்த்தி காலிறுதிக்கு நுழைந்தது செக்!



டி பிரிவின் இன்னொரு லீக் ஆட்டத்தில் 1988 ஆம் ஆண்டு சாம்பியனான ஹொலன்ட் - செக்குடியரசு அணிகளுக்கிடையிலான போட்டி இடம்பெற்றது. தொடக்க ஆட்டத்தில் ஜேர்மனியுடன் ஹொலன்ட் 1 - 1 அடிப்படையில் சமநிலையில் முடித்தது. செக்குடியரசு தொடக்க ஆட்டத்தில் 2 - 1 என்ற கணக்கில் லத்வியாவை வென்றிருந்தது.

ஹொலன்ட் வீரர்கள் தொடக்கத்திலிருந்தே சிறப்பாக ஆடியதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. நான்காவது நிமிடத்தில் ஹொலன்ட் முதல் கோல் அடித்து செக்குடியரசுக்கு அதிர்ச்சி கொடுத்தது. பவுமா இந்தக் கோலை அடித்தார். 19 ஆவது நிமிடத்தில் ஹொலன்ட் இரண்டாவது கோலை அடித்தது. வான் நிஸ்டல்ரூவி இந்தக் கோலை அடித்தார்.

இரண்டு கோல் வாங்கியதால் செக்குடியரசு மிகுந்த அதிர்ச்சி அடைந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அவர்கள் அனல் பறக்கும் ஆட்டத்தில் ஈடுபட்டார்கள். இதற்கு 23 ஆவது நிமிடத்தில் பலன் கிடைத்தது. கோலர் கோல் அடித்து செக்குடியரசின் கணக்கைத் தொடங்கினார்.

முதல் பாதி ஆட்டத்தில் ஹொலன்ட் 2:1 என்ற கணக்கில் முன்னணியில் இருந்தது. 2 ஆவது பகுதி ஆட்டத்தில் செக்குடியரசு வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 71 ஆவது நிமிடத்தில் செக்குடியரசு 2 ஆவது கோலை அடித்தது. பரோஸ் இந்தக் கோலை அடித்தார். இரு அணிகளும் தலா இரண்டு கோலை அடித்ததால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

இரு அணி வீரர்களும் வெற்றிக்கான கோலை அடிக்கக் கடுமையாகப் போராடியதால் ஆட்டம் மிகுந்த விறுவிறுப்புக்குள்ளானது. போட்டி முடிய இரண்டு நிமிடங்கள் இருந்தபோது செக்குடியரசு மூன்றாவது கோலை அடித்தது. விளாடிமிர் ஸ்மைசர் இந்தக் கோலை அடித்தார்.

இறுதியில் செக் குடியரசு 3:2 என்ற கோல்க் கணக்கில் வெற்றிபெற்றது. 2 கோல்கள் வாங்கி பின்தங்கியிருந்த செக்குடியரசு இறுதியில் 3:2 என்ற கணக்கில் வென்று அனைத்து ரசிகர்களினதும் பாராட்டைப் பெற்றது.

'டி' பிரிவில் உள்ள ஜேர்மன், செக்குடியரசு, ஹொலன்ட், லத்வியா ஆகிய நான்கு நாடுகளும் தலா இரண்டு ஆட்டத்தில் விளையாடி விட்டன.

அதன்படி, செக்குடியரசு 2 ஆட்டத்தில் வெற்றிபெற்று ஆறு புள்ளிகளுடன் கால் இறுதிக்குத் தகுதி பெற்றது. இந்தப் போட்டியில் கால் இறுதிக்குத் தகுதி பெற்ற முதல் நாடு செக்குடியரசு ஆகும்.

ஜேர்மன் 2 ஆட்டத்திலும் சமநிலை பெற்றதால் இரண்டு புள்ளிகளையும், ஹொலன்ட், லத்வியா அணிகள் ஒரு சமநிலையுடனும், ஒரு தோல்வியுடனும் தலா ஒரு புள்ளியைப் பெற்றன.

23 ஆம் திகதி நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் ஹொலன்ட் - லத்வியா, ஜேர்மன்-செக்குடியரசு அணிகள் மோதுகின்றன.








## ஆசியக் கிண்ணப் போட்டி இந்திய அணி அறிவிப்பு!

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஜூலை 16 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 1 ஆம் திகதிவரை இலங்கையில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான 20 பேர் கொண்ட இந்திய பயிற்சி அணி பெங்களூரில் நேற்று அறிவிக்கப்பட்டது.

ஹர்பஜன் சிங் உடல் தகுதி பெற்றதால், இந்திய அணியில் மீண்டும் இடம் கிடைத்தது. 20 வீரர்களும் வருகிற 3 முதல் 8 ஆம் திகதிவரை சென்னையில் பயிற்சி பெறுவார்கள். இதில் இருந்து இறுதி அணி வருகிற 7 அல்லது 8 ஆம் திகதி தேர்வு செய்யப்படும். ஆசியக் கோப்பைப் போட்டிக்கான இந்திய பயிற்சி அணி வருமாறு:

கங்கூலி (கப்டன்), ஷேவாக், ராகுல் டிராவிட், டெண்டுல்கர், லட்சுமன், யுவராஜ்சிங், முகமது கைவ், பார்த்தீவ் பட்டேல், கும்ளே, ஹர்பஜன்சிங், முரளி கார்த்திக், ரமேஷ் பவார், ஹேமங் பதானி, நெஹ்ரா, அகர்கர், இர்பான் பதான், எல்.பாலாஜி, அமீத் பண்டாரி, ரோகன் கவாஸ்கர்.

## தமிழீழ இளையோர் மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய இளையோர் மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் யூலை மாதம் யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

2004 இற்கான இப்போட்டிகள் 14,16,18 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தலைமையிலான குழு மேற்கொணடு வருகிறது.

போட்டி ஏற்பாடுகளின் ஒரு கட்டமாக தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன், ப.பத்மநாதன் ஆகியோர் திருகோணமலைக்கு வருகைதந்து திருகோணமலை மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் செயலாளர் ச.விஜயநீதன், உதவித்தலைவர் சி.ஈஸ்வரதாசன் க.யோகரெட்ணம் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் மாவட்ட அரசியற்துறைப் பணிமனையில் நடைபெற்றது. (10)

## கே.சி.சி.சி சுற்றுப்போட்டி ஜொலிஸ்ரார் அணியை வீழ்த்தி யங்ஸ்ரார் அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

கே.சி.சி.சி கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு எதிரான போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 27 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

சதீஸ்கண்ணா ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும், துஷ்யந்தன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் பந்துவீச்சில் மகேந்திரராஜா, சைலேந்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரா விளையாட்டுக்கழகம் 27 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

மணிவண்ணன் 60 ஓட்டங்களையும், சிவராஜ் 22, கிருஷ்ணராஜா 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

யங்ஸ்ரார் அணி சார்பில் சுதாகர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை மாலை நடைபெறவிருந்த போட்டிக்கு ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் வராததால் பற்றீசியன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டு அடுத்த சுற்றுக்கு தெரிவுசெய்யப்பட்டது.

## தொடக்க வீரர் விவகாரம் பிஷன் சிங்பேடி ஆலோசனை!

அணியில் இடம்பெற்றுள்ள சக வீரர்களைப் பற்றி வெளிப்படையாகக் கருத்துக் கூறுவதை வீரர்கள் தவிர்க்கவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பிஷன் சிங்பேடி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியில் வீரேந்திர ஷேவாக்குடன் இணைந்து ஆரம்ப ஆட்டக்காரராக களம் இறங்குவது குறித்த விடயத்தில் வீரர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

சக வீரர்கள் பற்றி வெளிப்படையாகக் கருத்துக் கூறுவதை வீரர்கள் தவிர்க்க வேண்டும் என்று பிஷன் சிங்பேடி கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயத்தைத் தேர்வுக்குழு பார்த்துக்கொள்ளும் என்றும், வீரர்களுடைய வேலை விளையாடுவதுதான் என்றும் -

வீரர்கள் யாருடைய பேரையும் குறிப்பிட்டுச் சொல்லாத பிஷன் சிங்பேடி, வெளிப்படையாகக் கருத்துக் கூறுவது அணிக்குள் இருக்கும் பிணைப்பைப் பாதிக்கும் என்றும் இது உகந்தது அல்ல என்றும் கூறினார்.

வளர்ந்துவரும் இளம் வீரர்களுக்கு தவறான முன் உதாரணமாக இலங்கை வீரர் முரளிதரன் போன்றவர்கள் இருப்பதாகக் கூறிய பேடி -

ஆசியக்கண்டத்தைச் சேர்ந்தவர்களில் ஏறக்குறைய ஒரு டசினுக்கும் மேற்பட்ட வீரர்களுடைய பந்து வீச்சு, முறையற்ற விதத்தில் இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

இந்தியாவில் திறமைமிக்க வீரர்கள் நிறையப்பேர் இருப்பதாகவும், ஆனால் இவர்களை முறைப்படுத்துவது மிகவும் முக்கியம் என்றும் பேடி கேட்டுக்கொண்டார்.

# வீதி விபத்துகளைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில், பொலிஸார் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாரால் தயாரிக்கப்பட்ட செய்திக் குறிப்பொன்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களுக்கான காரணங்களாக-

மதுபோதையில் வாகனம் செலுத்துதல், உள் வீதிகளிலிருந்து மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் வருவோர்கள் பிரதான வீதியில் வருகின்ற வாகனங்களைக் கவனியாது நேரடியாக பிரதான வீதிக்குள் நுழைதல், வீதியில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டிகளில் செல்லுதல், பாதசாரிகள் வீதிகளைக் கடந்து செல்ல அடையாளமிடப்பட்ட இடங்களில் அவர்களுக்கு இடம்கொடாமல் வாகனத்தைச் செலுத்துதல்.

பழுதடைந்த வாகனங்களை வீதியில் செலுத்துதல், இரவு நேரங்களில் வாகனத்தை வெளிச்சமின்றி அல்லது ஒருபக்க வெளிச்சத்துடன் செலுத்துதல், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், அளவிற்கு அதிகமான வேகத்தில் வாகனம் செலுத்துதல், வீதியில் வாகனம் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வாகனம் நிறுத்தாது நெரிசலான இடங்களில் வாகனம் நிறுத்துதல், வீதியில் ஒரே சமாந்திரத்தில் மூன்று அல்லது நான்கு துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்துதல், அளவிற்கு அதிகமான வேகத்தில் வானம் செலுத்தல், இரவு வேளையில் எதிரே வருகின்ற வாகனங்களுக்கு தமது வெளிச்ச விளக்கை குறைக்காமல் வாகனத்தை செலுத்துதல், தலைக்கவசம் இல்லாது மோட்டார் சைக்கில் செலுத்துதல், பாதசாரிகள், சைக்கிள்கள் ஒட்டும் சாரதிகள் ஆகியோர் இரு பக்கங்களும் அவதானம் இல்லாது செயற்படல், வாகனங்களைச் செலுத்துகின்றபோது, கையடக்கத் தொலைபேசியில் பேசுதல் போன்றனவாகும்.

எதிர்காலத்தில் இந்தக் குற்றச் செயல்கள் சம்மந்தமான சட்டத்தை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்ணிவெடி அகற்றும் பெண்கள் பிரிவால் 903 மிதிவெடிகளும் 57 ஷெல்களும் மீட்பு

(வடமராட்சி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பெண்கள் அணியினரால் 903 மிதிவெடிகளும் 57 ஷெல்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மிதிவெடிகள், ஷெல்கள் என்பன மருதங்கேணி - புதுக்காட்டு வீதியில் மசார் சந்தியிலிருந்து கல்லடிவைரவர் கோவில் வரையிலான இராணுவம் நிலை கொண்டிருந்த பகுதிகளிலிருந்தே மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பணிகள் அந்தப் பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (17)

# புதிதாக மின்னிணைப்பு வழங்குவதில் தாமதம்!

யாழ். மின்சார சபையினர் புதிய மின் இணைப்புக்களை வழங்குவதில் தாமதம் காட்டுவதாக பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கபட்டுள்ளது.

புதிய மின் இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான யாழ்ப்பாண மின்சார சபையின் மாகாண அபிவிருத்திப் பொறியியலாளரிடம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும், இதுவரையில் தமது விண்ணப்பங்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனப் பொது மக்கள் தெரிவித்தனர்.

சில விண்ணப்பங்கள் கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்டபோதும் இதுவரையில் தமக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்த பொதுமக்கள் உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தற்போதைய கடுங்காற்றினால் பயன்தரு மரங்கள் சேதம்

கடந்த சில நாட்களாக யாழ். குடாநாட்டில் வீசிவரும் கடுங்காற்றுக் காரணமாக பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்வதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி, கோப்பாய், அச்சுவேலி, புத்தூர் பகுதிகளில் வாழை மரங்கள் பல குலைகளுடன் வீழ்வதால் அவற்றில் பெறககூடிய பயன் இல்லாது போய் விடுகின்றன.

இதனால், வாழைப் பயிர்ச்செய்கையாளர்கள் பெரிதும் நட்டமடைய நேரிடுகின்றது.

இதனைவிட மாமரம், பலாமரம் முதலானவற்றில் உள்ள காய்களும் கடும் காற்றால் வீழ்வதால் அவற்றின் பயனையும் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

சில இடங்களில் மரங்களின் கிளைகள் முறிந்து வீழ்வதால் பெரும்பாலான பழ மரங்களின் பயன்கள் இழக்கப்படுவதாகவும் பழவியாபாரிகள் தெரிவித்தனர். (ப)

# நடைபாதைக் கடைகள் மீண்டும் இயங்க ஆரம்பம்

(கொக்குவில்)

யாழ். பஸ் நிலையம், போதனா வைத்தியசாலை வீதி என்பவற்றில் தடைசெய்யப்பட்ட நடைபாதைக் கடைகள் திரும்பவும் இயங்க ஆரம்பித்துள்ளன.

சமீபத்தில் அத்தகைய கடைகளை யாழ். மாநகர சபை அதிகாரிகள் பொலிஸாரின் உதவியுடன் அகற்றி இருந்ததுடன், பொருட்களையும் பறிமுதல் செய்திருந்தனர்.

நெரிசலை குறைக்கும் விதமாக நீண்ட காலமாக எடுத்துவரும் இந்த முயற்சி திரும்பத் திரும்பத் தோல்வியில் முடிவடைவது குறிப்பிடத்தக்கதாகும். (206)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள்

(வடமராட்சி)

யூலை 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நாடாளாவிய ரீதியில் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நாட்டில் சகல பகுதிகளிலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உள்ளூராட்சி வாரத்தில் முதல்நாள், சுகாதார சுத்திகரிப்பு தினமாகவும், இரண்டாம் நாள், விளையாட்டு தினமாகவும், முன்றாம் நாள், சூழல் பேணும் தினமாகவும், நான்காம் நாள், அபிவிருத்தித்திட்டத் தினமாகவும், ஐந்தாம் நாள், சிரமதான தினமாகவும் ஆறாம் நாள், தகவல் தொழில் நுட்பத்தினமாகவும், ஏழாம் நாள், பரிசு வழங்கும் தினமாகவும் கொண்டாடப்படவேண்டுமென உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. (17)



வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்ட கல்லூரியின் நிறுவுனரும் சைவப் பெரியாருமாகிய அமரர் கா.சூரனின் உருவச்சிலையை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் திறந்துவைப்பதை படத்தில் காணலாம். (12)

# 'அழகெழல்' கலைப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் பாடசாலைகளுக்கிடையே வருடாந்தம் நடாத்தும் 'அழகெழல்' எனும் கலைத்துறைசார்ந்த போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான - இசை (குழு), கிராமிய நடனம் (குழு), சிறுவர் நாடகம், தனி நடிப்பு, சித்திரப் போட்டி ஆகியவற்றுடன், ஆசிரியர்களுக்கான விசேட ஓவியப்போட்டியும் நடைபெறவுள்ளது.

போட்டிகள் யாவும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும். இசை நடனப் போட்டிகள் ஜுலை 9ஆம் திகதியும் நாடகம், ஓவியப் போட்டிகள் ஜுலை 10ஆம் திகதியும் காலை 9 மணி முதல் நடைபெறும்.

போட்டிகளில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப்பெறும் மாணவர்களுக்கு ரொக்கப்பணமும், சான்றிதழ்களும் பாராட்டுப்பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை ஜுலை 5ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறும், மேலதிக விபரங்களுக்கு 0777 034745 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## புதிய அங்கத்தவர்கள் இணைப்பு

(மட்டுவில்)

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிதாக அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்தச் சங்கத்தில் இணைய விரும்புவோர் சங்கச்செயலாளரிடம் 10 ரூபா செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## கரவெட்டி பிரதேச செயலராக சத்தியசீலன் நியமனம்

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலராக வவுனியா தமிழ் பிரிவு உதவிப் பிரதேச செயலராக கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு அவருக்கு பணிக்கப்பட்டுள்ளது. கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.கனகரட்ணம் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (17)

## சமூக சேவை உத்தியோகத்தர்கள் நியமனம்

(வடமராட்சி)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பத்துப் பேர் சமூக சேவை உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் ஏழு பேர் தமிழர்களும் மூன்று பேர் சிங்களவர்களுமாவர்.

திருகோணமலைக்கு ஒரு தமிழரும் 3 சிங்களவர்களும், கிளிநொச்சிக்கு 2 பேரும், மன்னாருக்கு ஒருவரும், மட்டக்களப்பிற்கு ஒருவரும், அம்பாறைக்கு ஒருவரும், யாழ்ப்பாணத்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அந்தந்தப் பகுதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பதவிகளை பொறுப்பேற்றுள்ளனர். (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



ஐந்தாவது அகவையில்



பெயர் : ம. டிறோசன்
முகவரி : கராஜ் லேன், சண்டிலிப்பாய்.

ஆறாவது அகவையில்



பெயர் : நி. நிருத்திகா
முகவரி : சரசாலை தெற்கு, சாவகச்சேரி

ஆறாவது அகவையில்



பெயர் : ஆ.சங்கீதா
முகவரி : நாகர் கோவில், மேற்கு

எட்டாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ. மிதுஷன்
முகவரி : குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# கலாசரம்



## பொக்கிசம்

'இலங்கையர் கோன்' என்ற புனை பெயருடன் தனது பதினெட்டாவது வயதிலேயே எழுதத் தொடங்கியவர் ந.சிவஞானசுந்தரம். முதலில் ஈழகேசரிப் பத்திரிகையிலும் பின்னர் கலைமகள் மூலமும் எழுத்துலகில் பிரபல்யம் பெற்றவர். இவரது முதற் கதையான 'மரியமதலேனா' தமிழகத்தின் கலைமகளில் வெளியாகியது. தமிழகத்தில் கலைமகள், சூறாவளி, மணிக்கொடி, பாரதத்தாய், சக்தி, சரஸ்வதி ஆகிய இதழ்களிலும் இங்கு தினகரன், வீரகேசரி, ஈழகேசரி, கலைச்செல்வி, ஈழநாடு ஆகியவற்றிலும் இவரது படைப்புக்கள் வெளியாகின.

எல்லாமாக இவர் முப்பது சிறுகதைகள் வரை எழுதியிருப்பார். இவரது பதினைந்து சிறுகதைகள் அடங்கிய 'வெள்ளிப் பாதசரம்' என்ற ஒரே தொகுதி 1962 இல் முதற் பதிப்பாகவும் 1978 இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளியாகியது.

தமிழகத்தில் 'கதைக்கோவை' என்ற தொகுதியில் இவரது கதைகள் இடம்பெற்றது.

சமஸ்கிருதம், லத்தீன், ஆங்கிலம் உட்பட தமிழிலும் இவர் ஆழ்ந்த பயிற்சி உள்ளவர். இது எழுத்துத் துறையில் இவரை விரிந்த தளத்தில் சிந்திக்கவும் எழுதவும் வைத்தது.

மகாகவி, சேக்ஸ்பியர் இவரைப் பெரிதும் கவர்ந்தவர். இதன் விளைவாக இவர் நிறைய கூற்றையங்க தொடர் நாடகங்களை எழுதினார். அவற்றுள் பல இலங்கை வானொலியினால் ஒலிபரப்பப்பட்டு பல்லாயிரம் மக்களை மகிழச்செய்தது. பச்சோந்திகள், லண்டன் கந்தையா, விதானையார் வீட்டில், மிஸ்டர் குகதாஸன் ஆகியன மேடைநாடகங்களாயும் வெற்றி பெற்றன.

மாதவி மடந்தை, மிஸ்டர் குகதாஸன் என்ற இரு நாடகங்களும் நூலுருப் பெற்றுள்ளன.

மொழிபெயர்ப்புத் துறையில் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவான் துர்கனேவின் முதல் காதல் இவரால் மொழிபெயர்க்கப்பட்டு தமிழக அல்லையன்ஸ் கொம்பனியால் வெளியிடப்பட்டது. கிளாருமிளிர், மனேக் ஆர்டன், விடியாத இரவு, வெறுங்கனவு, அந்த முத்தம், கூத்து, நீலக்கண்ணன், குயிலும் ரோஜாவும் என்பன அவர் மொழிபெயர்த்த பிற நாட்டுக்கதைகள்.

படைப்புத் துறையில் மட்டுமன்றி சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய அழகுக் கலைகளிலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தவர் அருங்கலை வினோதர்.

கொழும்புச் சட்டக்கல்லூரியில் பயின்று வழக்கறிஞர் பட்டம் பெற்று, வழக்கறிஞராய், பணியாற்றியவர் பின்னர் நிர்வாகசேவையில் காரியதிகாரியாகவும் பணியாற்றியவர்.

1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி மட்டக்களப்பில் யாரும் எதிர்பாராத விதத்தில் அவர் மரணமானார். அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இவரது மனைவியார் செல்லம்மா என்றும் 'என் நெஞ்சில் வாழும் அருமைக் கணவரின் பாதக்கமலங்களில் இக்கதாமாலையை சமர்ப்பிக்கின்றேன' என்ற சமர்ப்பணத்தோடு வெள்ளிப்பா தசரம் சிறுகதைத் தொகுதி வெளியாகியது.

செ.யோகநாதன்

# மனிதக் குரங்கு

சிறுகதை

இலங்கையர் கோன்



உதடுகளை மூடிக்கொள்ள முடியாதபடி முன்னோக்கிய மேற்பல் வரிசை: சிறிய பரிதாபகரமான கண்கள்: புருவங்களே இல்லை என்று சொல்லிவிடலாம். 'குறூ' தலை அலங்காரம் இலங்கைக்கு வரும் முன்னரேயே பொருளாதார நோக்கம் கருதிக் கால் அங்குலத்துக்கு மேல் நீளாது வெட்டிவிடப்பட்ட தலைமயிர், சிறிய காதுகள், வறுமையினால் இளமையிலேயே நரையும் திரையும் தேங்கிவிட்ட கன்னங்கள்....

ஏன்? இப்படி அசிங்கமான வர்ணனை செய்வதைவிட அது ஒரு குரங்கு என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம். ஆனால் அப்படிச் சொல்வதற்கு இல்லை. 'அது' ஒரு மனிதன், கந்தசாமி என்று பெயர். அவனை உண்மையாகவும் முற்றாகவும் அறிந்தவர்களுக்கு அவன் பெயர் "கந்தூஸ்" அல்லது "கந்தா".

ஆனால், என்றுமேதான் நாம் யாரையும் முற்றாக அறிந்து கொண்டோமா? மென்மையாகப் பேசுகின்ற பொருளாளியைக் கனவான் என்கிறோம். தன் குறைகளை மறக்க அதிகாரத் தொனியுடன் பேசும் ஒருவனை ஆளப் பிறந்தவன் என்கிறோம். இரண்டொரு பத்திரிகைகளைப் படித்துவிட்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் மேற்கோள் கூறுபவனை அறிவாளி என்று கூறுவதற்குக் கூட நாங்கள் தயங்குவதில்லை. ஆனால், 'கந்தூஸ்' அப்படி எல்லாம் இல்லை.

நான் அவனை வெகு நாட்களாகவே அறிந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தேன். ஆமாம் பாக்கியம் தான் பூர்வ புண்ணியத்தின் பயன் என்று கூடக் கூறுவேன். ஏனென்றால், அவனுடைய இருதயம் வைரத்திலும், வைடூரியத்திலும் பார்க்க மதிப்பில் உயர்ந்து. வைரத்தையும் வைடூரியத்தையும் எந்தப் பொற் கொல்லனும் எந்த நகை வியாபாரியும் மதிப்பிட்டு அதன் பெறுமதி, இத்தனை ரூபா இத்தனை சதம் என்று சொல்லி விடலாம். அவன்... அந்தக் குரங்கு முக மனிதனின் இருதயம் அனிச்சம் பூவிலும் மென்மையானது. அதுகூட எந்த வரட்டுக் கவியும் உவமை சொல்லிக் கழித்து விடலாம். ஒரு கற்பனைப் பெண்ணின் கால்களுக்கு உவமையானது என்று.

ஹ! பெண்ணின் கால்கள், பாதங்கள்! இவைதானா அனிச்ச மலரின் மென்மைக்கு உவமை? பெண்ணின் இருதயத்தைக் கூறினாலும் பாதகம் இல்லை. அதுவும் லட்சத்தில் ஒரு பெண்.

❄❄❄

அந்த லட்சத்திலே ஒருத்தியான ஒரு பெண் என்று தான் நினைத்தேன். கந்தூஸும் அப்படி நினைத்திருக்கக் கூடும். அவள் பெயர் காம சௌந்தரி, சிவகாம சௌந்தரி என்பதன் திரிபு. காலப் போக்கில் சிவம் உதிர்ந்து. காமமே சௌந்தர்யமாய், சௌந்தர்யமே காமமாய், காதலாய், கணம் யுகமாய், யுகமே கணமாய்.. அவை எல்லாம் பிறகு நடந்தவை.

கந்தூஸைச் சிறுவயது முதற் கொண்டே நான் அறிவேன். அவனை மற்ற மாணவர்கள் கொரில்லா என்று கேலி செய்ய நான் அண்ணே என்று அழைத்த காலம் அது. அதற்குக் காரணம் உண்டு. கணித ஆசிரியர் உன்மத்தம் கொண்டு - ஆமாம். உனமத்தம்தான் - பூவரசம் கட்டையால் கன்னத்தில் கருணையே இன்றி விளாசி என் கன்னம் பள்ளிக்கூட வாயிலில் பையன்களுக்கு வியாபாரம் பண்ணும் பிட்டுவாணிச்சியம்மை விற்கும், மூன்று நாள் வயது சென்ற கொழுக்கட்டை போலச் செந்நிறம் பாய்ந்து வீங்கிய பொழுதெல்லாம் கந்தூஸ்தான் என் கண்ணீரைத் துடைத்துத் தேற்றியவன்.

"இந்த அறுந்துபோன கணக்குப் பாடத்தை வீட்டில் கொஞ்சம் படித்துக் கொண்டு வரப்படாது?"

"போ அண்ணே! இந்தக் கணக்குப் பாடம் யாருக்கு வேண்டும்?"

"இலக்கியப் பாடத்தில் நூறு புள்ளி எடுத்தாலும் கணக்குப் பாடத்தில் தொப்பி என்றால் சோதனையே தொப்பி!"

"வீட்டில் எனக்குக் கணக்குப் பாடம் சொல்லித்தர யாரும் இல்லை"

எனக்கு மறுபடி அழுகை!

"சீ! இதற்கு அழுவார்களா? ஒவ்வொரு நாளும் மாலை பள்ளிக்கூடம் முடிந்ததும் நான் ஒரு மணிநேரம் உனக்குக் கணக்குப் பாடம் சொல்லித் தருகிறேன்" என்று கணிதத்தில் நிபுணனான அந்தக் "கொரில்லா" சொன்ன தோடமையாது. மாலை தோறும் என்னை 'மார்பிள்' விளையாடவும் விடாமல் பலவந்தமாக மறித்து வைத்து எனக்குக் கணிதம் ஊட்டுவான்...

ஆனால், சில சமயம் என் வகுப்பு மாணவர்களுடன் சேர்ந்து கொண்டு நானும் அவனை "கொரில்லா" என்று பழிப்பதுண்டு. இதற்கு எல்லாம் அவன் கோபம் கொள்வதே கிடையாது. அவன் எதற்கும் யார் மேலும் எந்தக்காலத்திலும் கோபப்பட்டது கிடையாது. அவன் கருணையே வடிவானான்.

அதன் பிறகு பத்து வருடங்களாக அவனை நான் காணவே இல்லை. சோதனைகளில் எல்லாம் சித்தியடைந்து பட்டங்கள் பெற்று, ஒரு வக்கீல் ஆகிக் கறுத்தக்கோட் அணியும் இளம் பட்டினிப் பட்டாளத்தில் நானும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டிருந்தேன், அச்சமயம்! ஒருநாள் காலை முதல் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் போய் இருந்து அனுபவசாலிகளான மற்றக் கறுத்தக் கோட்டவர்கள் வழக்குக்கள நடத்துவதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு கோட் பையில் அன்றைய வருவாய் என்று ஒன்றும் இல்லாமல் வீதியை நோக்கி நிலத்தைப் பார்த்த வண்ணம் நடந்து கொண்டிருந்தேன். ஒரு திருப்பத்தில் யாரோ என்மேல் மோதினார்கள். நான் சிறிது கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தேன். மறுகணம் "அண்ணே! நீயா?" என்று அலறியே விட்டேன்.

இளைய பள்ளி நாட்களில் ஒரு அழுக்குப் படிந்த நாலுமுழ வேஷ்டி மட்டும் அணிந்திருந்த கந்தூஸ் எனப்படும் கந்தசாமி இப்பொழுது அதேபோல் அழுக்குப் படிந்த மலிவான எட்டு முழ வேட்டியும் கிழிந்த ஒரு சேர்ட்டும் அதற்குமேல் நிறம் மங்கிப்போன ஒரு கோட்டும் அணிந்திருந்தான். அத்துடன் பொருக்கு வெடித்த பாதங்களில் ஒரு சோடி குதிதேய்ந்த அரைச்சப்பாத்து! ஆனால முகமும் தலையும் அதே பழைய கொரில்லாதான்.. அவனுடைய வறுமைக் கோலம் என் மனத்தைச் சோகத்தில் ஆழ்த்தியது. அவனது கொரில்லாச் சிரிப்பிலோ பேச்சிலோ சோகமோ கவலையோ இல்லை.

"ஐ சே! நீ... நீங்களா?" என்று தடுமாறிச் சிரித்தான். "நீங்கள், வக்கீல் சோதனை பாஸ் பண்ணி இந்த நகரில் தொழில் ஆரம்பித்திருப்பதாகக் கேள்வியுற்று மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்!"

"ஆனால், அண்ணே! நீ?"

"ஒரு குமாஸ்தா வேலை தேடித் திரிகிறேன். அதற்குள் சட்டக்கல்லூரி மாணவர்களுக்குப் பாடக் குறிப்புக்கள் 'ரைப்' செய்து விற்றுவருகிறேன்."

"எவ்வளவு ஊதியம் கிடைக்கிறது?"

"ஏதோ. என் வயிற்றுப் பாட்டையும் பார்த்து என் தம்பியின் பள்ளிக்கூடச் செலவும் கட்டி வருகிறேன்."

"எங்கே குடி இருக்கிறாய்?"

"ஒரு விடுதியில் ஒரு சிறிய அறை கிடைத்திருக்கிறது. அதுவே பெரிய பாக்கியம். மாதம் ஐந்து ரூபாதான் வாடகை."

அவனுடைய மேனியில் காணப்பட்ட சோர்வு எனக்குக் கவலை உண்டாக்கிற்று. "உன் உணவு?" என்று கேட்டேன்.

"இந்த நகரம் நிறையத்தான் சோற்றுக் கடைகள், ரொட்டிக் கடைகள், தோசைக் கடைகள் எத்தனையோ இருக்கின்றனவே!" அவன் சிரித்தான்.

"ஆனால் நீ என்னுடன் வந்து இருந்து விடேன். ஒரு சிறு வீட்டில் நான் தனியாகவே இருக்கின்றேன். அதில் என் அலுவலகத்தையும் வைதது்க் கொண்டிருக்கிறேன்."

"வேண்டாம். அது உங்களுக்குச் சங்கடமாக இருக்கும். ஆனால், உங்கள் அலுவலகத்தில் ஏதாவது எழுத்து வேலை, ரைப் அடிக்கும் வேலை இருக்கும். அதை வந்து நான் செய்து தருகிறேன். புதிதாக வக்கீல் தொழில் ஆரம்பித்திருக்கும் உங்களுக்கு ஒரு குமாஸ்தா வைத்துச் சம்பளம் கொடுக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். அதனால் சம்பளம் எதுவும் இல்லாமலே செய்து தருகிறேன். உங்கள் ரைப் அடிக்கும் இயந்திரத்தையும் சில சமயம் என் தேவைக்கும் பாவித்துக் கொள்கிறேன்."

ஆ! இவன் எவ்வளவு நல்லவன்! தீயவர்களும் நயவஞ்சகர்களும் வெற்றி கண்டு வாழும் இந்த உலகில், வாழ்வின் இன்னல்களுக்குச் சிறிதும் அஞ்சாத தைரியசாலியான இந்த மன மாசில்லான் உணவுக்கும் உடைக்கும் கூட இவ்வளவு கஷ்டப்படவேண்டி நேரிட்டதே என்று என் மனம் தாங்கொணா வேதனை அடைநதது. அதனால் அவனைப்போல நானும் சிரிக்க முயன்றேன்.

"அண்ணே, உன் இஷ்டப்படியே செய்து கொள்! அதற்குள் எங்காவது ஒரு அரசாங்கக் காரியாலயத்தில் உனக்கு ஒரு வேலை தேடித் தர முயல்வேன். ஆனால் இப்போது என்னுடன் வா, உணவு அருந்துவோம்."

மறுவாரமே அவனுக்கு மாதம் எண்பது ரூபா சம்பளத்தில் ஒரு குமாஸ்தா உத்தியோகம் கிடைத்தது.

அதன் பிறகுதான் அவன் காம சௌந்தரியை மணம் செய்து கொண்டான்.

❄❄❄

திருமண ஓலையில் அவள் பெயர் சிவகாம சௌந்தரி அம்மாள் என்றுதான் கண்டிருந்தது. திருமணத்துக்குப் பின் ஒரு நாள் அவன் என்னைத் தன் வீட்டிற்கு மத்தியான போசனத்துக்கு அழைத்திருந்தான். அப்பொழுது தான் அவள் சிவத்தைத் தவித்துவிட்ட காம சௌந்தரி என்பதைக் கண்டு கொண்டேன். உடல் சௌந்தர்யம் என்னவோ இருந்தது. ஆடையின் சௌந்தர்யமும், அணியின் சௌந்தர்யம், இளமையின் சௌந்தர்யமும் இருந்தன. ஆனால் மனத்தின் சௌந்தர்யம்? அன்பின் சௌந்தர்யம்? அவளுடைய செவ்வரி படர்ந்த கண்களின் பார்வை வெட்டும், புன்னகையும் பேச்சும் என் மனத்தில் கேள்விக் குறியாய் நிலைதது நின்றன. தலை குனிந்தபடி உணவு அருந்திவிட்டுக் கொரில்லாவிடம் விடைபெற்றுக்கொள்ள முனைந்தேன். அவன் விடவில்லை.

"சௌந்தரம் எப்படி?"

"யார் சௌந்தரம்?"

"என் மனைவி. பதிவுப் பெயர் சிவகாம. சௌந்தரி வீட்டில் எல்லோரும் சௌந்தரம் என்றுதான் அழைப்பார்கள்."

"அதுவா? நான் கவனிக்கவில்லை" என்று மழுப்ப முயன்றேன்.

"அழகான பெண், இவள் எனக்கு வாய்க்கக் கூடியவள் அல்ல, முற்பிறப்பில் நான் செய்து வைத்த புண்ணியத்தின் பயன். குணம் தங்கக் கம்பி. வீட்டு வேலைகளில் சாமர்த்தியக்காரி. பாருங்கள், வீட்டிற்குச் சமையற்காரனே வேண்டாம் என்று சொல்லி விட்டாள். சமையல் திறத்தில் அவளுடைய கைவண்ணம் இன்று நீங்கள் பார்த்தீர்களே!"

புதுப் பொம்மை கிடைத்த குழந்தை சிரித்துத் தன் பிஞ்சு உள்ளம் எல்லாம் அதில் பறி கொடுப்பது போல் கந்தூஸும் சிரித்தான். இறும்பூ தெய்தினான்... கூரையில் ஏறி நின்று கொக்கரித்துக் கூவாதது தான் குறை!

"அண்ணே. உன் மனைவியின் கைவண்ணம் என்ன, அவளுடைய கண் வண்ணத்தையும் கவனித்தேன்." என்று ஒழிப்பு மறைப்பு இல்லாமலே சொல்லிவிட எழுந்த என் நாவை அடக்கிக் கொண்டு, "அண்ணே, நீ உன் அலுவலகத்துக்குப் போய் விட்டால். இந்தத் தனி வீட்டில் உன் மனைவிக்கு யார் துணை?" என்று கேட்டேன்.

"அவள் வீர மகள்! அவளுக்கு எதற்குத் துணை?"

"ஆனால் நீ கூறுவது போல இவ்வளவு அரிய பண்புகள் எல்லாம் வாய்ந்த பெண்ணிற்கு நிறையச் சீதனமும் வாய்த்திருக்க வேண்டுமே!"

"ஆம்! ஏதோ இந்த நகரத்தில் ஒரு வீடும், பணமாகப் பத்தாயிரம் ரூபாவும் தருவதாகக் கூறினார் இவளுடைய தந்தை!"

"நொத்தாரிஸ் மூலம் சீதன உறுதி எழுதித் தந்தார்களா?"

"இல்லை, மூன்று மாதங்களுக்குள் எழுதித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். இவளுடைய தந்தை என் காரியாலயத்தில் வேலை செய்யும் ஒரு சக குமாஸ்தா! அதுவும் அவருடைய ஒரே ஒரு மகள்!"

"எழுதித் தரவில்லையானால்..."

"ஏன் எழுதித் தரமாட்டார்கள்? அவர் என் சகபாடியாயிற்றே!"

"ஆம்... ஆம்! உடனடியாக இது ஒரு கடமையாகக் கருதி எழுதியே தந்து தீர்த்து விடுவார்கள். இது துணிகள் மலிந்த காலம். இந்த மலிவான இந்தியன் டசூர்சூட் அணிந்து கொள்வதைவிட, இங்கிலாந்தில் இருந்து வரும் டுவீட் துணியில் இரண்டொரு 'சூட்' தைத்துக் கொண்டால் நல்லது.." என்று சிறிது கோபமாகவே பேசினேன்.

"ஐயா, எனக்கு ஆடம்பரங்கள் விருப்பம் இல்லை. எஞ்சும் பணம் எல்லாம் என் மனைவியின் ஆடைகளுக்கும், அணிகளுக்கும், அலங்காரங்களுக்கும் என்று நான் தீர்மானித்து விட்டேன். ஒரு அழகிய பெண் வீட்டில் அலங்காரமாக நடமாடினால் அதுவே ஒரு பாக்கியம். ஒரு சம்பத்து என்பது தாங்கள் அறியாததா?"

எனக்குப் கோபம் வந்தது. என்னுடைய முழு அன்புக்குப் பாத்திரமானவனும், பால் போல் வெள்ளையுள்ளம் படைத்தவனும் ஆகிய கந்தூஸின் மேல் எங்ஙனம் என் கோபத்தைக் காண்பிக்கலாம்!

"அண்ணே! நீ முன்னர் என்னை 'நீ' என்றும் 'அடா' என்றும் அழைத்து எனக்குப் பாடம் சொல்லித் தரவில்லையா? இப்பொழுது நான் வக்கீல், நீ ஒரு அரசாங்க அலுவலகத்தில்

(7 ஆம் பக்கம் பார்க்க)



# மனிதக் .....

சாதாரண குமாஸ்தா என்பதற்காக என்னை 'நீங்கள்' 'தாங்கள்' என்று ஏன் அழைக்கின்றாய், நான் இப்பொழுதும் உன்மேல் கொண்ட அன்பை விட்டுக் கொடுக்க மனம் இல்லாமல் 'நீ' என்று உன்னை அழைக்கின்றேன். வணக்கம். நான் போகவேண்டும்.''

அதற்குள் சிவத்தை உதிர்த்து விட்ட காமசௌந்தரி வெற்றிலைத் தட்டு, சிகரட் பாக்கெட் முதலியவற்றுடன் வந்து நின்றாள். என் மனத்தின் பொரிவு இன்னும் அதிகமாகியது.

"வணக்கம்! நான் இவை பாவிப்பதில்லை. உங்கள் அழைப்பிற்கு நன்றி!'' என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் வீதியில் இறங்கி விட்டேன்.

மழை மேகங்கள் மேல் வானத்தை மூடி வைத்திருந்தன. ஆதவன் அந்த மேகத்திரையில் மறைந்து கொண்டு பூவுலகிற்கு ஒளியும் உயிரும் தருவதாகப் பாசாங்கு செய்தான். அதற்குள பேய்க்காற்று ஒன்று எழுந்து தடித்த வயது முதிர்ந்த வாகை மரங்களின் வாடிய செம் மலர்களை நிலத்தில் சிதற வைத்தது. எங்கோ தொலைவில் ஒரு குயிலின் சோகம் நிறைந்த தனிக்குரல்...

❋❋❋

விளையாடுவதற்கு ஒரு அழகிய பொம்மை கிடைத்தவன் அதனுடன் விளையாடிக்கொண்டிருந்து அலுத்துப் போகட்டும் என்று நான் சில மாதங்கள் கந்தூஸைப் பாக்கப் போகாமல் இருந்துவிட்டேன். அத்துடன் ஆயிரம் கவலை எனக்கு! என்னுடைய வக்கீல தொழில் வளர்ந்து கொண்டு வந்தது. உடம்பு புரட்டி, தவழ்ந்த பிறகு குறுநடை பயிலும் குழந்தை போல.

ஆனால், கந்தூஸ் என்ற கந்த சாமி மட்டும் என்னைச் சனிக்கிழமை தோறும் மத்தியான போசனத்துக்கோ இரவுப் போசனத்துக்கோ அழைக்கத் தவறுவதில்லை. நான் போவதே இல்லை. அவன் என்ன நினைத்தானோ?

அவனுக்கு என்னைக்காணாமல் இருக்க முடியவில்லையோ, ஏதோ அறியேன். ஒருநாள் என் அலுவலகத்துக்கு அதே அழுக்கேறிய உடை, சீவாத தலை முதலிய அவனுக்கே பிரத்தியேகமான அலங்காரங்களுடன் வந்தான். "வா அண்ணே" என்று கூறக்கூடிய அன்பு சிறிது சிதறிப் போய் இருந்தாலும். "வாருங்கள் இருங்கள்'' என்று மற்றவர்களுக்குச் சொல்வது போல் மரியாதைக்குச் சொல்லி வைத்தேன்.

என்னை உத்தியோக அலுவல் சம்பந்தமாகப் பார்க்க வந்திருந்தவர்களை ஒவ்வொருவராக அனுப்பி வைத்தேன். ஈற்றில் நானும் கந்தூஸ் என்ற கொரில்லாவும் எஞ்சி நின்றோம். அவன் சிரித்தான். 'என்ன மலை மனிதனைத் தேடி வராவிட்டால், மனிதன் மலையைத் தேடி வருவது தானே!'' அவன் சிரிப்பிலே ஏதோ ஒன்று அசம்பாவிதமாகப்பட்டது.

"அண்ணே, நீ ஏதாவது கஷ்டத்தில் மாட்டிக் கொண்டாயா?''

"இல்லை, உங்களைப் பார்க்க வருவது ஒரு கஷ்டமா?''

"ஆனால் விஷயத்தைக் கூறு!''

''ஒன்றும் இல்லை...'' என்று இழுத்தவன். "உங்களுக்கு மறைத்து வைத்து என்ன பயன்! எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறான்'' என்று சிரித்தான். அவனுக்கு ஆனந்தம் தாழவில்லை. "நீ விவாகம் செய்து இன்னும் ஏழு மாதங்கள் கூடப் பூர்த்தியாகவில்லையே..." என்று பதறிவிட்டேன்.

"அதனால் என்ன! ஏழு மாதங்களில் குழந்தைகள் பிறப்பதில்லையா? பிறக்கும்பொழுது குழந்தையின் நிறை என்ன தெரியுமா? ஒன்பது இறாத்தல்!''

ஒன்பது மாதங்கள் நிறைவு பெற்று ஜனனம் ஆகும் குழந்தைகள் கூட ஒன்பது இறாத்தல் நிறையுள்ளவையாக இருப்பது துர்லபம். இந்த வளம் இல்லாத நாட்டிலே, என்று என் எண்ணங்கள் ஓடின.

"பிள்ளையின் முகம் உன் முகத்தைப் போல அழகாக இருக்கின்றதா?''

"என்னை விட்டுத்தான் தள்ளுங்கள். எனக்குச் சிறுவயது முதல் "கொரில்லா" என்ற பெயர் நிலைத்து விட்டதே! ஆனால் என் குழந்தை அதிசுந்தர ரூபலாவண்யன். அவன் எனக்கு மைந்தனாப் பிறந்ததும் என் பூர்வபுண்ணியபலன்'' என்று சிரித்தான்.

"அட கொரில்லாவே, மனிதக் குரங்கே, உனக்கு வெண்மையானது எல்லாம் என்றும் பால்தானா?'' என்று எனக்குள் மறுகினேன்...

# நூல் அகம்




| | |
|---|---|
| நூலின் பெயர் | - இணுவை முருகன் பிள்ளைத் தமிழ் |
| பாடியவர் | - பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் |
| வெளியீடு | - இளந்தொண்டர் சபை கந்தசுவாமி கோவில், இணுவில். |
| விலை | - 100/= |

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் நாடறிந்த கவிஞர், மரபுக் கவிதைகளை இயற்றுவதில் பாண்டித்தியம் நிறைந்தவர். கவிதைகள் மட்டுமன்றி சிறுகதை, நாவல், காவியம் எனப் பல்வேறு இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டு வருபவர்.

தமிழின் இலக்கிய வடிவங்களில் ஒன்றான பிள்ளைத் தமிழ் இலக்கிய வகையை கையாண்டு தனது சொந்த ஊரான இணுவிலில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் மீது இணுவை முருகன் பிள்ளைத் தமிழ் என்ற நூலை கவிஞர் வெளியிட்டு இருக்கின்றார்.

கவிஞர் இணுவை முருகன் பிள்ளைத்தமிழ் 1980ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்துள்ளது. தற்போது 2004 ஆம் ஆண்டில் இந்த நூல் தனது இரண்டாவது பதிப்பை காண்கின்றது.

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை இந்த நூலை வெளியிட்டு வைத்துள்ளது. மேன்மை கொள் சைவ நெறியை ஈழத்தில் தளைக்கச் செய்தவர்களில் ஒருவராகிய ஆறுமுக நாவலருக்கு இந்த நூல் கவிஞர் பஞ்சாட்சரத்தால் சமர்பிக்கப்படுகின்றது.

பொதுவாக பிள்ளைத் தமிழ் இலக்கியம் என்பது பாட்டுடைத்தலைவனைக் குழந்தையாகப் பாவனை செய்து பத்துப் பிரிவுகளில் வைத்துப் பாடுதல் பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும்.

இந்தப் பிள்ளைத் தமிழ் ஆண் மகவைக் குறித்த தாயின் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும், பெண் மகவைக் குறித்த தாயின் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் பெயர் பெறுகின்றது.

காப்பு, செங்கீரை, தாலாட்டு, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை ஆகிய பத்து உறுப்புக்களை அமைத்துப்பாடுதல் ஆண்பாற் பிள்ளைத் தமிழின் மரபாகும். இந்த உறுப்புக்களில் இறுதியாகவுள்ள மூன்று உறுப்புகள் நீங்கலாக அம்மானை, கழங்கு, ஊசல் என்ப வற்றை இணைத்து பெண்பாற் பிள்ளைத் தமிழ் பாடப்படுவது மரபாகவுள்ளது.

குழந்தையிடம் இயல்பாகக் காணப்படும் செயல்கள், இயல்புகள் தோற்றங்கள் முதலியவற்றுக்கு முன்னுரிமை அளித்துப் பாடல்கள் பாடப்படும். ஒவ்வொரு பருவத்திலும் பத்துப் பத்துப் பாடல்கள் அமைத்து நூறு பாடலில் பிள்ளைத் தமிழ் பாடப்படும். இவ்வாறான தமிழ் இலக்கண நெறி முறைகளுக்கு ஏற்ப இணுவை முருகன் பிள்ளைத்தமிழ் கவிஞர் பஞ்சாட்சரத்தால் பாடப்பட்டுள்ளது.

ஈழத்தில் பிள்ளைத் தமிழ் இலக்கிய வரலாற்றை எடுத்துக் கொண்டால் ஒல்லாந்தர் காலத்தில் இணுவில் சின்னதம்பி புலவரால் பாடப்பட்ட இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழே காலத்தால் முற்பட்டதாக கருதப்படுகின்றது.

இணுவிலைச் சேர்ந்த ச.வே.பஞ்சாட்சரம் இந்த வரிசையில் இணுவை முருகன் பிள்ளைத் தமிழை இயற்றி தன் ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.

'முகமாறு கொண்ட
முதிராத தம்பி
முருகோனின் பெயரில் எளியேன்' என்று தொடங்குகின்றது இணுவை முருகன் பிள்ளைத் தமிழ். பிள்ளைத் தமிழிற்குரிய இலக்கணங்களுக்கு ஏற்ப காப்புப் பருவத்தில்

'அலை பாற்கடல் அரவுச்சுருள்
அரும் பள்ளியில் துயில்வோ' னையும்
'இழிமும்புரம் எரியிட்டவனையும'

அன்னை சிவகாமியையும், படைப்புத் தொழில் புரியும் பிரமாவையும், 'வேலற்கெழில் வள்ளி தந்த வேழமுகனையும், வைரவ நாதனையும், வெங்காளியையும், இந்திரனையும் அகத்தியர் பிற தெய்வங்கள் முதலான வர்களையும், இணுவைத் தமிழ் திருநாட்டவர் முருகன் தனைக் காக்குமாறு வேண்டுகின்றார் கவிஞர்.

செங்கீரைப் பருவத்தில் தேனள்ளிச் சிந்தும் முருகனைக் கற்பனை செய்து அவனின் புகழ்பாடி கெஞ்சியும், கொஞ்சியும் குதூகலித்துக் கூத் தாடுவோம் வாருங்கள் என கவிஞர் அழைக்கின்றார்.

தாலாட்டுப் பருவத்தில் வண்டாறிரண்டு கொண்டாடுகின்ற செண்டான இணுவை முருகன் எட்டுத்திங்கள் இளஞ்சேயாக தொட்டியில் கிடந்து சுடர் பரப்புகின்ற அழகனை தாலாட்டி மகிழ்கின்றார் கவிஞர்.

பின்பற்றல் என்றும் பிள்ளைத் தனத்தின் பிம்பமாக பிஞ்சுக் கரங்களால் சப்பாணி கொட்டிக் களித்து மகிழும் பத்துமாதப் பருவத்தனாக இணுவை முருகனைக் காண்கின்றார் கவிஞர். சப்பாணிப் பருவத்தில் இலங்கையில் முருகன் வீற்றிருக்கும் இடங்களையும் கவிஞர் குறிப்பிடத்தவறவில்லை.

சிவபெருமான் பெற்ற பிரம்படி, மாநிலத்தில் உள்ளவர் அனைவரையும் வருத்தியதைப் போல முருகப் பெருமான் சிவனுக்கு அளிக்கும் முத்தம் அகிலமெங்கும் ஆருயிர் அனைத்துக்கும் இன்பச் சிலிர்ப்பை தரும் என்றும், கள்ளூறும் பூமழையில் களித்தாடும் கனிக்கொத்தே! கள்ளூறும் வாயால் அளிப்பாயோ சுகமுத்தம் என்றும் முத்தப்பருவத்தில் கவிஞர் வேண்டுகின்றார்.

முத்தித்தாகம் மும்முரப்பட்டு முழு நெஞ்சம் தொழநிற்கும் பக்தர் நாம் பரவசமாய் முருகனை வருக என்று கோரி பரிந்தழைப்போம் வாருங்கள் என்று வருகைப் பருவத்தில் அழைக்கின்றார் கவிஞர்.

வல்லசுரனை மாய்த்த முருகப் பெருமானின் வல்லாண்மையைப் புகழ்ந்து வண்ண நிலவை அம்புலிப் பருவத்தில் அழைக்கின்றார் கவிஞர்.

வல்லசுரரை மாய்த்த முருகப் பெருமானின் வல்லாண்மையைப் புகழ்ந்து வண்ணை நிலவை அம்புலிப் பருவத்தில் அழைக்கின்றார் நம் கவிஞர். அடியவர்களையும் கவிஞர் துணைக்கழைக்கின்றார்.

சிற்றில் பருவத்தில் சிங்கார வேலன் திருவீதி மணலில் திரிந்தயர்ந்தாடிச் சிறுகுறும்புகள் இயற்றுகின்றார். பத்தொன்பது மாதம் பசும்பொன்மேனிய னான அவன் திருவிளையாடல் காண வாரீர் என அழைக்கின்றார் கவிஞர்.

ஆணவ அசுரப் படையைக் கும்பல் கும்பலாக குதித்தோட விரட்டுகின்ற வகையில் இணுவைப் பதியான் இருபத்தொரு மாதப் பருவத்தனாய்ச் சிறு பறைத் தொண்டகம் அதிர முழங்குவதாக சிறு பறைப் பருவத்தில் குறிப்பிடப்படுகின்றது. இந்த அரிய வாய்ப்பை வாழ்த்திப்பாட அழைக்கின்றார் கவிஞர். இரண்டு வயதுச் சிறுவனாக இணுவையம் பதியில் தேருருட்டி மகிழ்கின்ற முருகனின் அழகைப் பாடும் கவிஞர் நவவீரர் பறைசொட்ட, சவகணங்கள் சனம் விலக்க அண்டர், சிவகாமி அம்மை நவசக்தியர் சூழ்ந்து வர சிறுதேர் உருட்டி மகிழ்கின்ற அழகை, சிறுதேர்ப் பருவத்தில் பாடுகின்றார் கவிஞர். இணுவை முருகன் பிள்ளைத் தமிழ் இவ்வாறு இணுவை முருகனின் அருட் திறத்தை விதந்து பாடுவதைக் காணமுடிகின்றது. பாடல்களிலே சொற்சுவை, பொருட்சுவை அணி அலங்காரங்கள் யாவும் படிப்பவரை பரவசமூட்டுவதாகவும் உள்ளன.

தன் குலதெய்வமான முருகனின் அருட் செயல்களையும் ஞாபகம் ஊட்டியவாறு இந்த நூல் காணப்படுகினறது.

- பூ.நகுலன்.



# நான்கு கவிதைகள்

(1)
தேடலின் கடைசி விளிம்புவரை
சென்று திரும்ப முடிகிறது
மனபரிக்கு

நிஜம் ஏளனமாய்
சிரித்துக்கொண்டிருக்கும்
சற்றைய முந்திய கணத்தில்

(2)
மரணத்தோடு
புதைந்து போயின
பலவீனங்கள்

தொடரும் பிறப்பின்
அவஸ்தை போல் காயங்கள்

வாங்கியவன் மன்னிக்கலாம்
காயங்களுடன் வாழ்ந்த
வாழும் அவனுக்கு
இல்லை விசனம்

பழகிப்போன சொறிச்சலைப் போல்

இருக்கிறது
இல்லை
தொடர்ந்து ஒலித்து
கொண்டிருக்கிறது
முகம் மாறிய அசரீரியாய் ;

(3)
கலககாரனின்
தாக வேட்கை
உச்சாடனம் பண்ணி
கொண்டிருக்கும்

புதைக்கப்பட்ட சரீரங்களின்
ஆத்மாவின் குரல்

பு,ச்சி கொல்லிகளின் மத்தியிலும்
விதையின் குணமாய்

விருட்சங்களின்
உற்பத்தி அந்த
கலக குரல்களின்
அலை வரிசையில்

மரணம்
வாசிக்கப்படும்

இருண்ட குகைக்குள்
மாட்டிக் கொண்ட
சிறுமியின் பதட்டத்தை போல்
இருக்கிறது வாழ்க்கை

மீட்சியின் தவமாய்
தொடர்கிறது
சய பரிதாபத்தின் ஆட்சி ;

(4)
அலுவலகக் கோப்புக்களில்
காணாமல் போன
அன்றைய நாளின்
தேடலின் விடை

உச்சஸ்தாயியில்
சப்த துகள்களாய் கரைகின்ற
ராகத்தின் உச்சமாய்
இயங்கும் சரீரம்
கோப்புக்களை வெறுகாமல்

சூரியன் இறங்கும் பொழுதில்
மேனியெங்கும்
பரவி நிற்கும் கம்பளிப்பு,ச்சியாய்
இம்சைப் பண்ணும் கோப்புகள்
நாளைய நாளில்
மீண்டும் உச்சஸ்தாயியில்
ஏறி நிற்கும்
நிச்சயமான காலையில்

- மேமன்கவி.

# இலக்கிய முத்து

தமிழ் இலக்கியப் பரப்பிலே ஆயிரமாம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புலவர்கள் எல்லாம் நட்சத்திரங்களாக ஒளிவீசிக் கொண்டே இருக்கின்றனர். புலவன் என்பதன் பொருள் புலமை உள்ளவன் என்பதாகும்.

துன்பம் வந்துற்றபோது துலங்குதல் அறியா மனம் கொண்ட கவிப்பெருந்தகைகள் வறுமை வந்துற்றபோதும் பாடுதற்குரியவரை அன்றி அடுத்தவரைப் பாடாப் பெருந் தன்மை வாய்ந்தவர்கள்.

தமிழ் மொழி நானிலத்தில் நயம்பெறத் தம் பாடல்களால் ஆரம்கட்டிய அறிவுசால் ஆன்றோர் அதற்கும் அப் பால் தம் கவித்துவத்தை வெளிப்படுத்தத் தவறியதில்லை.

அவ்வாறு தம் கவித்துவத்தையும் புலமையையும் நிலைநாட்டப் பாடிய இலக்கிய வடிவங்களுள் "ஒன்றே கடைமொழி மாற்று'' என்கின்ற பா வடிவமாகும்.

"கடைமொழி மாற்று'' என்பது குறிப்பிட்ட பாடலின் ஈற்றுச் சொல்லை செய்யுளின் முதலாவது சொல்லாகக் கொண்டு பொருள் கொள்ளுதலே ஆகும்.

அவ்வாறு கடைமொழி மாற்றாகப் பொருள் கொள்ளா விட்டால் பாடலின் பொருள் யதார்த்த விரோதமாக மாறிவிடும். இவ்வாறு வித்துவச் செருக்கோடு செய்யுள் செய்வதை பழந்தமிழ்ப் புலவர்கள் பெருமையாகக் கொண்டனர்.

இவ்வாறு கடைமொழி மாற்றாகப் பாடப்பட்ட காளமேகப் புலவனுடைய செய்யுள் ஒன்றை நோக்குவோம்.

மாடு தின்பான் பார்ப்பான் மறை ஓதுவான் குயவன்
கூடி மிக மண்பிசைவான் கொல்லனே - தேடி
இரும்படிப்பான் றான்செக்கா ணெண்ணெய்
- விற்பான் வண்ணான்
பரும்புடவை தப்பும் பறை.

மாடு தின்பான் பார்ப்பான் பிராமணன் மாட்டினுடைய இறைச்சியை உண்பான், மறையோதுவான் குயவன் - குயவன் வேதத்தினை ஓதுவான், கூடி மிக மண் பிசைவான் கொல்லனே - இரும்பு வேலைகளைச் செய்யும் கொல்லன் மண்ணினை விரும்பிக் குழைப்பான், தேடி இரும்படிப்பான் செக்கான் வணிகன் இருமபினை அடிக்கும் தொழிலைச செய்வான், வண்ணான் பருப்புடவை தப்பும் பறை. சலவைத் தொழிலாளி பெரிய பறையினை அடிப்பான் என யதார்த்த விரோதமான பொருள் தருகின்றது.

## கடைமொழி மாற்று

இந்தச் செயயுளை கடைமொழி மாற்றாகப் பொருளுரைத்தால் -

பறை மாடு தின்பான் - பறை என்கின்ற வாத்தியத்தை அடிப்பவன் மாட்டு இறைச்சி உண்பான். பார்ப்பான் மறையோதுவான - அந்தணன் வேதத்தினை ஓதுவான், குயவன் கூடி மிக மண் பிசைவான - குயவன் பாத்திரங்களை வனைவதற்காக அதிகம் மண்ணைக் குழைப்பான், கொல்லன் தேடி இரும்படிப்பான் - கொல்லன் இரும்பினைத் தேடி எடுத்து அடிப்பான், செக்கான் எண்ணெய் விற்பான் - வணிகன் எண்ணெய் விற்பான். வண்ணான் பரும்புடவை தப்பும் - சலவைத் தொழிலாளி வருகின்ற உடைகளைச் சலவை செய்வான்.

காளமேகத்தின் கவித்துவம் தான் என்னே!

- லெஸ்லி.

**தெற்குத்திசையினிலே**

**- இந்திரஜீத்**

# நாட்டில் பதற்றத்தை தோற்றுவிக்கும் அரச பிரசார நடவடிக்கையின் இலக்கு...

இலங்கையின் சமாதான முனைப்புகள் முடங்கிப்போய் உள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவிக்கும் அளவிற்கு அனைத்து சமாதான அம்சங்களும் கேள்விக்குறியாகி உள்ளன. நாட்டின் சிறுபான்மை அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகா







ரத்தை வைத்துக் கொண்டு ஒரு வருட காலத்துக்காவது ஆட்சி நடத்தலாம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எணணம் கொண்டுள்ளது. அதன் மூலம் தமது ஆட்சியை மேலும நீடிக்க முடியுமா? என ஆலோசனைகளையும் ஜனாதிபதியின் தரப்பு மேற்கொண்டு வருகிறது. மறுபுறத்தில் அந்த தரப்புக்கு எழக் கூடிய சவால்களை ஜனநாயக ரீதியில் அல்லாமல் மாற்று வழிகளிலும் சமாளிக்கும் வழிகளையும் ஜனாதிபதியின் தரப்பு ஆராய்ந்து வருகிறது. தற்சமயம் கிடைத்துள்ள ஆட்சியதிகார வாய்ப்பை நழுவ விட்டால் மக்கள் மத்தியிலிருந்து மீண்டும் ஒரு முறை தமக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்வது கஷ்டமான விடயம் என்பது அரசாங்கத்தை பொறுத்த வரையில் நன்கு தெரிந்த விடயமாகும், எனவே தான் ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்பலத்தை வைத்துக் கொண்டு தமது கட்சி அரசியலை தக்கவைத்துக் கொள்ள ஜனாதிபதியின் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆயத்தங்களை செய்து வருகிறது. இதன் காரணமாகவே தமது கட்சியின் செல்வாக்கை பாவித்து ஜே.வி.பி, பாரிய அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருவதைக் கூட சிறிலங்கா சுதந்திரக்கட்சி கண்டும் காணாதது போல இருந்து வருகிறது. தனித்து நின்று ஆட்சி அமைக்க முடியாது என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சக்கு நன்கு தெரிந்த விடயமாகும். எனவே தான் ஜே.வி.பியின் நிழலில் இருந்துக் கொண்டு இருக்கும் மட்டும் அரசாங்கம் ஒன்றை நடத்தி செல்லும் நோக்கமே ஜனாதிபதியின் எண்ணமாக உள்ளது. மக்கள் முன்னிலையில் மாற்றுக் கருத்துகளை முன்வைப்ப தன் மூலம் மாத்திரம் அரசாங்கம் எதையும் முன்னகர்த்திச் செல்ல முடியாது என்பது யதார்த்தம். அதிலும் இலங்கையைப் பொறுத்த வரையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அங்கு இவ்வாறான மாற்றுத்திட்டங்கள் மாத்திரம் ஆட்சிக்கு கைகொடுக்கமாட்டாது. இனப்பிரச்சினை ஒன்று தீர்க்கப்படாத நிலையில் இருக்கும் போது அதனை மறைத்து தமது கட்சி அனுகூலங்களை மாத்திரம் மேற்கொள்வது யதார்த்தமற்ற செயலாகும். அதுவே இன்று இலங்கையில் நடக்கிறது. யுத்தம் ஒன்று இடம்பெறுகின்ற காலப்பகுதியாக இருக்குமாக விருந்தால், தற்போதைய சிறுபான்மை அரசாங்கம் ஒரு மாததத்துக்குக் கூட தாக்குப் பிடித்திருக்காது.

(போர் நிறுத்தம் காரணமாக தப்பியுள்ள தென்னிலங்கை அரசியல்)

போர் நிறுத்த உடன்பாட்டை ஐக்கிய தேசிய கட்சி நடைமுறைக்கு கொண்டு வந்தமை காரணமாக இன்று தென்னிலங்கை அரசியலும் தப்பிப் பிழைத்துள்ளதை எவரும் ஏற்றுக் கொள்வார்கள். எனவே இதனை உணர்ந்த படியால் தான் ஐக்கிய தேசிய கட்சி நடைமுறைப்படுத்திய போர் நிறுத்த உடன்பாட்டை மாற்றியமைக்க வேண்டும் என கோசம் எழுப்பிய ஜே.வி.பி, இன்று அது தொடர்பில் கருத்து எதனையும் கூறாமல் தன்னடக்கம் பேணுகிறது. தம்மை விட்டு, ஜனாதிபதியின் கட்சி தனித்து செயற்பட முடியாது என்ற எண்ணத்திலேயே அந்த கட்சியினர் ஜனாதிபதியின் தரப்பினருக்கு நேரடியாகவே சவால்களை விடுக்கின்றனர். ஜே.வி.பியை பொறுத்த மட்டில் அது இன்றைய ஆட்சியை நீடித்துச் செல்லலாம் என்ற எண்ணம் இல்லாத நிலையிலேயே இருக்கிறது. ஆனால் ஜனாதிபதியின் தரப்பினால் ஜே.வி.பி வழங்கப்பட்டுள்ள உறுதி மொழிகளை அடுத்து அந்த முன்னணியும் அரசியலில் நடைமுறை சாத்திய மற்ற மாறுபட்ட வாத விவாதங்களை முன்வைத்து வருகிறது. இலங்கையில் நாடாளுமன்றம் சுமார் ஒரு மாத காலத்திற்கு தமது அமர்வுகளை பிற்போட்டுள்ளது. இது ஜனநாயக நாடொன்றில் புதிய அரசாங்கம் ஒன்றின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை தகர்க்கும் அம்சம் என்றே எடுத்துக் கொள்ள முடியும். இந்த விடயத்தில் தற்சமயம் தமது நகர்வுகளை மிகவும் கவனமான நிலையில் நகர்த்திச் செலகிறது. நாடாளுமன்ற அமர்வுகளை இந்தளவு காலத்திற்கு பின்தள்ளி வைக்கும் வகையில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் அளவிற்கு, ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் நகர்வுகள் கூர்மையாகியுள்ளன என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஐக்கிய தேசிய கட்சி இந்தளவு தூரம் அரசியல் நகர்வுகளை முன்கொணர்ந்த போதும் அரசாங்கத்தை கவிழ்க்கும் அளவிற்கு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள அந்தக் கட்சி சற்று பின்னிற்கிறது. இது நீண்ட கால அரசியல் நடவடிக்கையின் நகர்வாகவே அமைந்திருந்தாலும், அந்தக் காலப் பகுதியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமது ஆட்சிக்கான ஸ்திர தன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் என்ற அச்சம் அந்தக் கட்சியின் ஆலோசகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. எனவே ஐக்கிய தேசிய கட்சி தறபோதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கத்தைப் பொறுப்பேற்க 'வேண்டும் என்ற அழுத்தம் கட்சியின் தலைமைக்கு 'குறிப்பிட்ட ஆலோசகர்களால் கொடுக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வு ஜூலை மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமானதன் பின்னர் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேணடும் என்பதே ஐக்கிய தேசிய கட்சி ஆலோசகர்களின் பரிந்துரையாகும். இந்தப் பரிந் துரையை ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை தற்சமயம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. தமிழரசுக் கட்சி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுக்கு வெளியில் இருக்கும் ஆதரவுடன் மாற்று அரசு ஒன்றை அமைப்பதுடன், அதனை 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வரை நகர்த்திச் செல்லக் கூடியதுமான அரசாங்கம் ஒன்றையே ஐக்கிய தேசிய கட்சியினால் ஏற்படுத்த முடியும். அதனையே மையமாகக் கொண்டு தடைப்பட்ட சமாதான முன்னெடுப்பை மேற்கொண்டு டோக்கியோ நிதியைப் பெறுவதும் ஐக்கிய தேசிய கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளாகும். இந்தக் கால கட்டத்துக்குள் தமது கட்சிக்கான ஆதரவை வாக்காளர் மத்தியில் அதிகரித்துக் கொள்ள முடியும் என ஐக்கிய தேசிய கட்சியினர் எதிர்பார்க்கின்றனர். டோக்கியோ நிதியை பெற்று நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்பது மற்றும் தென்னிலங்கையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் 2005 ஆம் ஆண்டில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஊட்டப்பட்டு வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தை ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், மீண்டும் அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து ஐக்கிய தேசிய கட்சி நினைத்தும் பார்க்க முடியாது என்ற நிலை காணப்படுவதாக அந்த கட்சியின் ஆலோசகர்கள் எச்சரித்துள்ளனர். இந்த நிலையிலேயே அரசாங்கத்தின் சார்பு குழுக்கள் சமாதானம் என்ற நகர்வை மேற்கொள்ளும் அதே நேரம் அந்த சமாதான முனைப்புகளை தடுக்கும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இதில் ஒரு கட்டமே கிழக்கில் பதற்ற சூழ்நிலை ஒன்றை நீடித்துச் செல்லும் நடவடிக்கையை முன்கொண்டு செல்லும் நகர்வாகும். இதில் அரசாங்கத்தின் ஊடகங்களும் பெரும் பங்கை வகித்து வருகின்றமையை கடந்த வாரக்காலப்பகுதியில் நோக்கக் கூடியதாக இருந்தது. மறுபுறத்தில் கொழும்பிலும் தற்கொலை அங்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவமானது நிலைமையை மேலும் சற்றுப் பதற்றமாக்கிக் காட்டும் அரச சார்பு நடவடிக்கையே என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ◆


## மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை

எமது பிரதேசத்தை மிதி வெடியிலிருந்து மீட்கும் மிதிவெடி அகற்றல்ச் செயற்பாட்டிற்கு நாம் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குவோம்.

- ☐ மிதிவெடி அகற்றுபவர்களினதும் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களினதும் அறிவுரைகளைக் கேட்டு நடப்போம்.
- ☐ மிதிவெடி அகற்றுபவர்கள் அப்பிரதேசத்தை வைபவரீதியாகக் கையளிக்கும் வரை அப்பிரதேசத்தை தவிர்த்து நடப்போம்.
- ☐ மிதிவெடி அகற்றும் இடங்களிலுள்ள மிதிவெடி அபாயப் பலகைகள், நிறக்கட்டைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட வேறு பொருட்கள் அந்தந்த இடங்களில் இருப்பதை உறுதி செய்வோம்.
- ☐ எமது வளர்ப்புப் பிராணிகளான ஆடு, மாடு அப்பிரதேசத்தினுள் செல்வதைத் தடுப்போம்.
- ☐ விரும்பத்தகாத செயலில் ஈடுபடுவோருக்கு எம்மால் இயன்றளவுக்கு அறிவுரைகளை வழங்கி அவர்களையும் ஆதரவு நல்கச் செய்வோம்.



**District Mine Action Office, Jaffna**

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி 2677)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அறிவுஉடையோர் ஆவது அறிவார் அறிவிலார்*
*அஃதுஅறி கல்லா தவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நாம் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டிய காலம்

இது கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்.

தற்சமயம் தற்காலிகமாகவேனும் போர் ஓய்ந்த பூமியாக உள்ள எமது பிரதேசங்களில் போர்க்கால அச்சங்களும், எச்சரிக்கைகளும், அவலங்களும் இன்னும் விலகிவிடவில்லை.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மட்டுமல்ல, அவர்களிமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில்கூட போர் விட்டுச் சென்ற எச்சங்களின் அச்சமூட்டும் ஆபத்துக்கள் எம்மக்களை அன்றாடம் பீதிகொள்ள வைத்துக்கொண்டே உள்ளது.

எமது இனத்தை பல்வேறு வழிகளிலும் திட்டமிட்டு அழிக்க உத்வேகம் கொண்டு அநாகரிகமானதும், நியாயமற்றதும், மனித உரிமைகளை நிராகரித்ததுமான போர் ஒன்றை இரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் தமிழ்மக்கள் மீது திணித்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள், எமது பாரம்பரிய வாழ்விடங்களை கந்தக பூமியாக்கி வெடிபொருள் புதைக்கப்பட்ட பிரதேசமாக்கிய கொடுமையை நிகழ்த்திவிட்டே இன்று சமாதானம் பேசுவதாக மாயாவாதம் பேசுகிறார்கள்.

யாழ் - கண்டி வீதி வழியாகப் பயணிக்கும் மனிதநேயம் கொண்ட இதயங்கள், அவர்கள் எந்த இனத்தவர்களாக - மதத்தவர்களாக இருந்தாலும் சரி, வீதியின் இருமருங்கும் காணப்படும் மண்டையோட்டுக் குறியுடன்கூடிய எச்சரிக்கைப் பலகைகள், பதாகைகள், மற்றும் கண்ணிவெடிகள் தொடர்பான அறிவிப்புப் பலகைகள் போன்றவற்றைக் காணும்போது குமுறவே செய்யும்.

அந்தச் சிவப்பு வரிகளின் சிங்களப்பேரினவாதம் எம் மண்ணின் வளம் செறிந்த மக்கள் வாழ்விடங்கள், தொழிலிடங்கள் அனைத்தையும் கண்ணிவெடி வயல்களாக்கி அவற்றில் மனித இருப்பினை இழப்பை எதிர்கொள்ளும் வகையில் மாற்றி விட்டுள்ள அவலம் குறித்த செய்திகளை வெளிப்படையாகவே தெரிவித்துநிற்கின்றன.

எல்லாவற்றையும்விட வேடிக்கையானதும் அதேசமயம் வேதனை தருவதுமான விடயம், கண்ணிவெடி சூழ்ந்த மக்களின் வாழ்விட ஆக்கிரமிப்பு பகுதிகளுக்கு இராணுவம் உயர் பாதுகாப்பு வலயம் எனப் பெயர் வைத்துள்ளமையேயாகும்.

பாதுகாப்பு மக்களுக்கல்ல... படைத்தரப்புக்கே... இதுவே இலங்கையின் ஆட்சியாளர்களின் விருப்பமாகும். அதனால் தான் சமாதான காலத்திலும் இந்த கண்ணிவெடி புதைக்கப்பட்ட பகுதிகளை, கண்ணிவெடி வயல்கள் எனக்கூறி இன்னமும் வர்ணித்தபடி பாதுகாத்து வருகிறார்கள்.

ஆக கண்ணிவெடி கவனம் என்ற எச்சரிக்கை தமிழ்மக்களுக்கான இலங்கை அரசின் நிரந்தர அச்சுறுத்தலாக இன்னமும் இந்த சமாதான காலத்திலும் தொடர்ந்துமிருக்கும் அவலம், இலகுவில் அல்லது விரைவில் நீங்கும் தன்மை கொண்டதாக இல்லை.

எச்சரிக்கைகள், அச்சுறுத்தல்கள், ஆபத்துக்கள் சூழ்ந்த நிலைக்குள் தமது இயல்பு வாழ்க்கையை தேடி அலையும் தமிழ்மக்களின் சமகாலமும், எதிர்காலமும் ஊனமுற்று வாழும் வாழ்வை எந்தக்கணத்திலும் எதிர்கொள்ளவேண்டிய விதிக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலையும் உள்ளதுதான் மிகப்பெரிய துயராகும்.

எவர்காலை, எவரின் வாழ்வை எந்த இடத்தில் புதைக்கப்பட்ட எந்தக் கண்ணிவெடி இலக்குவைத்துக் காத்திருக்கிறதோ... எவர் அறிவார்?

அச்சுறுத்தல் எச்சரிக்கை விடுத்தபடி நிற்கும் மண்டையோட்டுக் குறியீட்டுப் பலகைகள் அச்சுறுத்தும். ஆனால், முழுமையான பாதுகாப்பை வழங்குமா?

எச்சரிக்கையற்ற இடத்திலும் கண்ணிவெடிகள் காத்திருக்கும் என்ற உண்மையை கடந்தகால, அதன் தாக்குதலுக்குள்ளான ஜீவன்களின் கண்ணீர்க் கதைகள் ஆதாரப்படுத்திக் கொண்டே இருக்கின்றன...

விதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் நிறைந்த பல பிரதேசங்களின் வரைபடங்கள் அந்தச் செயற்பாட்டைச் செய்த படைத்தரப்பினரிடமே இல்லையென்ற செய்தியே இன்னும் அதிக அச்சமூட்டும் விடயமாகும்.

இவற்றிலிருந்து நம்மை நாமே பாதுகாக்க விழிப்புணர்வுடன் இருக்கவும் - இயங்கவும் வேண்டிய காலகட்டம் இதுவாகும்.

பேரினவாதம் எங்களை அங்கவீனர்களாக்கி வேடிக்கை பார்க்க நினைத்தே, லட்சக் கணக்கில் கண்ணிவெடிகளை விதைத்துவிட்டு இன்று கண்ணிவெடியகற்றும் பணிகளை மேற்கொள்வதாகப் பெருமளவில் பிரசாரம் செய்துவருவதுதான் வேடிக்கை.

உண்மையில் அரசுக்கு மனிதநேயம் இருந்திருந்தால், இன்று நாம் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பணிகளில் பல்வேறு ஆபத்துக்களுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கில் ஆட்களை ஈடுபடுத்த வேண்டிய அவசியமே இருந்திருக்காது.

இலங்கையரசு மேற்கொண்ட நியாயமற்ற போருக்கு ஆதரவாக கண்ணிவெடிகளை அள்ளிவழங்கிய பல ஆயுத வர்த்தக நாடுகள் பலவும், இப்போது கண்ணிவெடியகற்றும், மனிதநேயப் பணியிலும் ஈடுபடமுன்வருவதும் இன்றைய சமகால நிகழ்வாகியுள்ளது.

எப்படியானாலும் கண்ணிவெடிகள் தொடர்பான எம் மக்களுக்கான ஆபத்துக்கள் இப்போதைக்கு உடனடியாக நீங்கும் என்று எவரும் கூறினால் அது அபத்தமேயாகும். இன்றும் ஒரு தசாப்தத்திற்கும் அதிக காலம் அதன் ஆபத்துக்களை நாம் எதிர்கொள்ளவேண்டியவர்களாகவே இருக்கவேண்டிய அபாயம் உள்ள நிலையில், அதனைக் குறிக்கும் வகையில் அல்லது முடிந்த அளவு தவிர்க்கும் வகையில் எமது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டிய அவசியம் உள்ளது.

அதனை உணர்த்துவதை இலக்காகக் கொண்டதே இந்தக் கண்ணிவெடி விழிப்புணர்வு வாரமாகும்.

நாம் விழிப்பாக இருந்தே நம்மைப் பாதுகாக்க முடியும். நம் தலைமுறையினரையும் பாதுகாக்கமுடியும்.

# நாடும் நடப்பும்




# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அடையாள விரிவுரைகள் பகிஷ்கரிப்பு

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக, நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் அசமந்தப் போக்கை காட்டி வருவதைக் கைவிட்டு, மாணவர்களின் கல்விக்கு இயல்பு நிலையை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை அடையாள விரிவுரைகள் பகிஷகரிப்பை மாணவர் சமூகம் மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பரீட்சைகள் பாதிக்காதவகையில், அன்றைய விரிவுரைகளை மட்டும் பகிஷ்கரித்து, எமது அடையாள பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு அனைத்து மாணவர்களையும் ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அடிக்கடி இவ்வாறான வேலை நிறுத்தப் போராட்டம் எமது பல்கலைக்கழகத்தில் நடைபெறுவது மாணவர்களுடைய கல்விக்கு ஆரோக்கியமானதொன்றல்ல. பல்கலைக்கழகம் மாணவர்களுடைய சொத்து. எனவே இங்கு மேற்கொள்கின்ற செயற்பாடுகள் மாணவர் நலனை மேம்படுத்துவதாக அமையவேண்டும். மாணவர்களுடைய இயல்பான கல்விச் செயற்பாடுகளை உறுதிப்படுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கே உண்டு.

எனவே, இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வினை எடுத்து எமது பல்கலைக்கழகம் இயல்பான நிலையில் இயங்குவதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாதவிடத்து மாணவர்களையும் தொடர்ச்சியான போராட்டத்திற்கு தள்ளிவிடும் ஓர் இக்கட்டான நிலையை தோற்றுவிக்கும், இதனை நிர்வாகமே கருத்தில் எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லொழுக்க சாரதி வாரம் மத்திய கல்லூரியில் ஆரம்பம்

மக்கள் பாதுகாப்பு, சட்டம், சமாதான அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்ட நல்லொழுக்க சாரதி வாரத்தினை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடைப்பிடித்து கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முறைசாரா கல்விச் சாரதியப்பயிற்சிப் பிரிவும், கல்லூரியின் சேவைக்கழகங்களும் செய்து வருகின்றன.

இன்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இந்த நிகழ்ச்சி வாரத்தில் தினமும் பி.ப. 3 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ். கல்வித் திணைக்களம், மோட்டார் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச்சபை, தனியார் போக்குவரத்துச்சங்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், செஞ்சிலுவைச் சங்கம், மக்கள் நலன்புரிச் சங்கங்களின் படையணிப் பிரிவுகளிலிருந்து அறிஞர்கள், பேச்சாளர்கள், கலந்து கருத்தாங்குகளும் விரிவுரைகளும் நடாத்தவுள்ளனர்.

வாகன உரிமையாளர்களும், சாரதிகளும், சாரதிய பயிற்சி பெறுபவர்களும், சாரதிய பயிற்சிக்கு செல்ல விரும்புவோரும் கலந்துகொண்டு பயனடையலாம்.

முறைசாரா கல்விப் பிரிவின் சாரதிய பயிற்சிபெறும் சகல மாணவர்களும் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும் சாரதிய பயிற்சி அறிவுரை வகுப்பிற்காகவும் நல்லொழுக்க சாரதி வாரம் நிகழ்வுக்காகவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

# மேல் கொத்மலை திட்டத்தினால் ஏழு நீர்வீழ்ச்சிகள் அழிவடையும்

மேல் கொத்மலை நீர்மின் திட்டம் செயற்படுத்தப்பட்டால் சுமார் ஏழு பிரதான நீர் வீழ்ச்சிகள் அழிவடைந்து போகுமென மத்திய சூழல் அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டில் அதிகரித்து வரும் மின்சாரத் தேவையை பெருமளவில் ஈடு செய்ய முடியுமெனினும், இந்த நீர்மின் திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏழு நீர் வீழ்ச்சிகள் திசைதிருப்பப்படுவதன் காரணமாக பல ஆறுகள் வற்றக்கூடிய அபாயநிலை காணப்படுவதாகவும் மத்திய சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தினை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடுமையாக எதிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நீர்மின் திட்டத்தினால் மலையகத் தமிழர்களின் நிலப்பிரதேசங்கள் சூறையாடப்படுவதோடு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும். இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆதாரமாகக் கொண்டே இந்தத் திட்டத்திற்கான கடும் எதிர்ப்பினை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்து வருகின்றது.

இதன் காரணமாகவே அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த முக்கிய கோரிக்கைகளுள் ஒன்றாக மேல்கொத்மலைத் திட்டம் கைவிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அது முன் வைத்திருந்தது.

இதேவேளை, மேல்கொத்மலைத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பிரேரணையை மிக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக 'ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மின் சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பு பலியானோரின் தொகை 31 ஆக உயர்வு

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம்வரை இந்த நோய்க்குப் பலியாகியுள்ளோரின் எண்ணிக்கை 31ஆக அதிகரித்துள்ளதுடன், டெங்கு நோய் சம்பந்தமாக சிகிச்சை பெற்றவர்களின் தொகை 5434ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு ஒழிப்புத் தொடர்பான தொடர் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய சுகாதரா அமைச்சு, இதற்கு சகலரினதும் ஒத்துழைப்பையும் கோரியுள்ளது.

இந்த நடவடிக்கை உரியவகையில் கைக்கொள்ளத் தாமதமானால் பாரிய அச்சுறுத்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க நேரலாம் எனவும் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு எச்சரித்துள்ளது.

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்பட்ட கொழும்பு, கம்பக மாவட்டங்களில் இந்த நோய்க்குள்ளானோரின் எண்ணிக்கை குறைந்து வரும் அதே வேளை, வெளி மாவட்டங்களில் இந்த நோயக்குள்ளாவோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதாகவும் சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.

அரசியல் அரங்கு

கே.ரி.கணேசலிங்கம்

# வறிய நாடுகளில் தங்கியிருக்கும் ஐக்கிய அமெரிக்க வல்லரசு



உலக அரசியல் போக்கில் அமெரிக்காவின் உலகளாவிய மேலாதிக்க அதிகாரம் **(Hegemonic Power)** பலவீனமான நிலைக்குத் தள்ளப்படுவதாக நியூயோர்க் பல்கலைக்கழக ஆய்வாளர் **Immauael Wallerstein** எச்சரிக்கின்றார். அவரது எச்சரிக்கைக்கு சாதகமாக அவரே முன்வைக்கும் கருத்துக்களையும், அதன் யதார்த்தத்தையும் பரிசீலிப்போம்.

அமெரிக்காவின் மேலாதிக்க அரசியலுக்கு அதன் பொருளாதார உறுதிப்பாடும், அரசியல் உறவும் பிரதான இடத்தை வகிக்கின்றது. உலகளாவியமட்டத்தில் அமெரிக்காவின் பொருளாதார, சர்வதேச அரசியல் பிரபலத்திற்கு அடிப்படையில் அபிவிருத்தி அடைந்துவரும் அரசுகளே மிகப் பிரதானமான பங்காளிகளாக காணப்படுகின்றன. அவற்றிலும் ஆசிய நாடுகளே அமெரிக்க மேலாதிக்கத்திற்கு பக்கபலமாக உள்ள சக்திகளாக விளங்குகின்றன. காரணம், அமெரிக்காவுடனான வெளிநாட்டுக் கொள்கையும் அமெரிக்காவைச்சார்ந்த கொள்கை வகுப்புகளுமாகும். உலகளாவிய வர்த்தகத்தில் அமெரிக்காவின் நட்பு நாடுகளில பெரும்பாலானவை ஆசியாவைச் சார்ந்த வையாகும். குறிப்பாக தடையற்ற வர்க்க அமைப்பில் அமெரிக்காவுடன் வளர்ந்த நாடுகள் கொண்டிருக்கின்ற உறவைக் காட்டிலும், ஆசிய நாடுகளே அதிக நெருக்கத்தைப் பின்பற்றுகின்றன. இதனை அமெரிக்க ஆட்சியாளர்கள் தொடர்ந்து பேண விரும்புவதற்கும், பேணிவருவதறகானதுமான காரணமாக விளங்குவது பின்தங்கிய நாடுகள் அமெரிக்காவுடன் முரண்பிடிக்கமாட்டாது என்பதாகும். தடையற்ற வர்த்தக உடன்பாட்டில் உலகளாவிய ரீதியில் அமெரிக்காவுடன் அதிக உறவுகளைப் பேணும் நாடுகள் வரிசையில் முதன்மை வகிக்கும் நாடுகளாக சீனா, பிரேசில், இந்தியா என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்தியாவுடன் 2000 ஆம் ஆண்டில் மட்டும் 857 அமெரிக்க டொலர்களுக்கு தடையற்ற வர்த்தகத்தை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. இது மேற்குறிப்பிட்ட பாரிய சனத்தொகையைக் கொண்ட நாடுகளுடன் மட்டும் முடிந்ததல்ல. பாகிஸ்தான், இலங்கை போன்ற சிறிய நாடுகளுடனும் அமெரிக்காவின் வர்த்தக உறவுகள், வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் இராணுவ ரீதியான உடன்பாடுகள் என்பனவற்றுக்கு அதிக முக்கியத்துவமும், வாய்ப்பும் கொடுக்கப்படுகின்றது. ஒரு வகையில் கூறுவதாயின் வறிய நாடுகளுடன் பக்கபலத்தில் மேலாதிக்கம் செய்யும் அரசாக அமெரிக்கா விளங்குகிறது என்பதாகும்.

காலணித்துவம் என்ற அடக்கு முறையினால் பிரித்தானியர் மேற்கொண்ட அணுகுமுறைகளை அமெரிக்கா வறிய நாடுகள் மீது தற்போது மேற்கொள்கின்றது. வெளிபபடையாகப் பார்த்தால் அமெரிக்க உறவு ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் போதிப்பதாக அமையும் அடிப்படையில் அவ்வாறான எதுவுமற்ற போலியான உறவு முறையாகவே உள்ளது. சுரண்டலை இலக்காகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையில் வறிய நாடுகள் பேரம்பேசலை அதிகம் கொண்டிருக்காதவை என்பதுடன், அமெரிக்க அதிகாரத்துக்கு முன் முரண்பிடிக்க முடியாத அரசுகளாக வறியநாடுகள் காணப்படுவதும் அமெரிக்காவுக்குச் சாதகமாகவுள்ளது. இவை எதனையும் வளர்ந்த அல்லது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எவற்றுடனும் மேற்கொள்ள முடியாது என்பதனை 2001 ஆம் ஆண்டு ஐரோப்பியயூனியன் எடுத்த முடிவிலிருந்து உணரலாம். அதாவது, கழிவுப் பொருட்களிலிருந்து உறபத்தி செய்யப்படும் **(Re - Food)** மீளுணவு என்று அழைக்கப்படும் எந்த உணவுப் பொருளையும் அமெரிக்கா ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யமுடியாது என ஐரோப்பியயூனியன் தடைவிதித்தது. இந்த அறிவிப்பு அமெரிக்க பொருளாதாரத்தில் ஏழுவீதமான இழப்பீட்டை உடனடியாக ஏற்படுத்தியது. ஐரோப்பியயூனியன் வரிவடைய இவ்விழப்பீடு அதிகரித்தே வருவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு ஐரோப்பாவிற்கு உற்பத்தியான மீளுணவுப் பொருட்கள் வறிய நாடுகளுக்கு சந்தைப்படுத்தப்படுகின்றது. மீளுணவு மட்டுமன்றி அமெரிக்கா ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யும் எந்தப் பொருளும் ஐரோப்பிய மக்களின் உடல் உள ஆரோக்கியத்தைப் பாதிக்காது இருப்பதுடன் நீண்டகாலத்திலோ, குறுகிய காலத்திலோ அவ்வகை உணவுப் பொருட்களால் ஐரோப்பியா பாதிக்கப்படக்கூடாது என்ற கொள்கையையே ஐரோப்பியயூனியன் எடுத்துள்ளது. தங்கள் பிரஜைகள் மீது எத்தகைய பாதுகாப்பினை பேண ஐரோப்பிய ஆட்சியாளர் விரும்புகின்றனர் என்பது புலனாகின்றது.

இனிக் கட்டுரையின் பிரதான பகுதிக்கு வருவோம். **IMMANUEL WALLERSTEIN** கூறுவது போல 2000 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து அமெரிக்கப் பொருளாதாரம் ஆபத்தான கட்டத்தை நெருங்க ஆரம்பித்துவிட்டது. அதற்கு ஐரோப்பியரது அணுகுமுறையும் ஒரு காரணமாகும். ஐரோப்பியர் வர்த்தக மற்றும் உற்பத்தி நடைமுறையால் அமெரிக்காவை நெருக்கடிக்கு உள்ளாக்கியது மட்டுமன்றி யூரோ நாணயத்தின் அறிமுகத்தாலும் அதிக பொருளாதார நெருக்கடியை அமெரிக்கா எதிர்நோக்கும் நிலைக்குத்தள்ளினர். இதனடிப்படையில் அமெரிக்கப் பேரரசு **(Ammerican Empire)** வாதத்திற்கான எண்ணம் முரண்பாடுகளையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்குகின்றது என்பதை நோக்குவோம்.

முதலாவது **Immanuel Wallerstein** குறிப்பிடுகின்றது போல் பேரரசு வாதத்திற்கான அணுகுமுறை இராணுவவாதமாக மட்டும் நோக்கப்படும் விடயமல்ல. அமெரிக்காவின் ஆட்சியாளர்கள் இராணுவவாதம் என்ற மாக்சிய வல்லியின் பழைய சிந்தனையே பேரரசுவாதத்திற்கான பரிமாணமாகக் கொள்கின்றனர். இது ஒரு போலியான உலகத்தை இராணுவ மயப்படுத்துகின்ற விடயமாகும். இது பலமான வல்லரசுவாதமல்ல. உதாரணத்திற்கு மேற்காசியா மீதான முதலாவது படையெடுப்பு பல அரசுகளால் நிகழ்த்தப்பட்டது. இரண்டாவது போர், பிரித்தானியாவுடன் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் உதிரிகளாக சில அரசுகள் சேர்ந்தன என்பதே பலவீனமான, இராணவ இலக்கை மட்டுமே கொண்டதாக அமெரிக்க வல்லரசு வாதம் காணப்படுகின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றது.

இரண்டாவது, அமெரிக்கா கடந்த 30 ஆண்டுகளாக சமகால அரசியலுக்கு கொடுக்கும் விபரணமும் வியாக்கியானமும் பலவீனமானதாக விளங்குகின்றது. உலகம் ஓய்வாக இருப்பதும் மாற்றுச் சக்திக்கு போதிய சூழல் இல்லாமையுமே அமெரிக்கப் பிரகடனங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் உலகம் செவி சாய்ப்பதற்குக் காரணமாகும். எதிர்காலத்தில் பல பிரகடனங்களை வில்லியம் புஷ் முன்வைக்கத் தயாராகின்றார். அவை அனைத தும் இராணுவப் பிரகடனங்களாகும். 1970 களில் உலகப் பொருளாதாரம் பலமடைந்தது. அப்போது மேற்கு ஐரோப்பாவின் பொருளாதரமும் உறுதியாகக் காணப்பட்டது. இது 1980 களில் ஜப்பானிடம் மாறியதாகவும் 1990 களில் அமெரிக்காவின் பொருளாதாரம் பலமடைந்ததாகவும் கருதப்பட்டது. இவை யாவற்றையும் ஒரு நம்பிக்கையாக மட்டுமே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதற்குக்காரணம் இராணுவபலம் அமெரிக்காவிடம்குவிந்திருப்பதென்றே அவர் விளக்குகின்றார். வேண்டுமாயின் அடுத்துவரும் 20-30 வருடத்திற்கு அமெரிக்கா இராணுவ பலமுடைய அரசாக விளங்கலாம். அது வரை பொருளாதார பலமுடைய அரசு என தம்மை அமெரிக்கா கூறிக்கொள்ளலாமென அவர் வாதிககின்றார்.

ஈராக் விடயம் பற்றி ஆய்வாளர் கூறுகின்றபோது, அமெரிக்கா வெற்றிபெறுமென தான் கருதவில்லை என்கிறார். மிகவிரைவில் அமெரிக்காவின் கட்டமைப்பு வீழ்ந்துவிடும் என்றும், தற்போது அது மிகப் பலவீனமான கட்டத்திலுள்ளது என்றும் கூறுகின்றார்.

ஈராக்கில் பெருகிவரும் தற்கொலைத் தாக்குதல்கள் அவ்வகையான விளக்கத்தையே தருகின்றது, இதனை மக்கள் நிராகரிப்பதுடன், வல்லரசுக்கு எதிராக அதன் ஆரம்பத்திலேயே அதிக எதிர்ப்பையும், வெறுப்பையும் உலக மக்கள் காட்டியநிகழ்வு அமெரிக்காவுக்கு எதிராகவே நிகழுகின்றது.

மூன்றாவதாக, அவர் கூறும் வாதம் அமெரிக்காவின் உட்கட்டமைப்பு தகர்ந்து கொண்டு செல்கின்றது. பொருளாதார நெருக்கடி மட்டுமன்றி, சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு, நல்வாழ்வு, பாதுகாப்பு எனப் பல விடயங்கள் பாரிய பாதிப்பை அடைந்துவருகிறது. நம்பிக்கையின்மை வலுத்துவருவதுடன், அமெரிக்க அரசாங்கம்மீது அமெரிக்க மக்களே சந்தேகப்படும், அச்சமடையும் நிலை வளர்ந்துவருகிறது. இது பேரரசுக்கான ஆரோக்கியமான அணுகுமுறையல்ல என்கிறார்.




வேலையின்மை, தொழிலாளர்களின் உரிமைகள் மீதான அமெரிக்க அரசின் கட்டுப்பாடுகள் அமெரிக்க நகரங்களை ஸ்தம்பிதமடையச் செய்கிறது என்கிறார். இது ஒரு சிவில் யுத்தத்திற்கு **(Cival War)** கொண்டு செல்லும் போல் தெரிகிறது. அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது, மேற்கு ஐரோப்பா நூறுமடங்கு ஆரோக்கியமானதாகவும், அமைதியாகவும், பிரஜைகள் மீதான பாதுகாப்புடன் காணப்படுகின்றது என ஒப்பீடு செய்கின்றனர். வறுமை, சட்டரீதியான பிரச்சினை, சமூக நெருக்கடிகள் மற்றும் சமூக முரண்பாடுகள் என அமெரிக்க மக்கள் அதிகபாதிப்பை எதிர்நோக்குகின்றனர்.

இறுதியாக அவர் அமெரிக்கப் பேரரசு வாதம் தகர்கின்றது என்பதற்குக் கூறும் காரணம், பொருளாதாரக் காரணியாகவுள்ளது. அமெரிக்காவின் மிகப்பிரதான முதலீட்டாளர்களாக சீனாவும், ஜப்பானும் காணப்படுகின்றது.

இவை கடந்த ஆறுமாதங்களாக முதலீட்டின் அளவைக் குறைத்துவருவதும், டொலர் வீழ்ச்சி அதிக இழப்பீட்டை அந்த நாடுகளுக்கு ஏற்படுத்தி இருப்பதும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இதனால் அமெரிக்கா பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதும், எதிர்காலத்தில் இரண்டு நாடுகளிலும் அமெரிக்கா தங்கியிருக்கும் தன்மை ஆபத்து மிக்கது என்ற ஆலோசனையையும் முன்வைக்கின்றார். ஆனால், வறிய நாடுகள், அமெரிக்கப் பொருளாதாரத்தில் பெரியளவிலான பங்கைப் பெறாது விட்டாலும், நெருக்கடியைக் கொடுக்காத நாடுகளாக விளங்குவதுடன், அமெரிக்காவுக்குப் பாதுகாப்பான சூழலையும் ஏற்படுத்தியுள்ளன. மிகப்பெரும் எதிரியாக விளங்கும் ஐரோப்பாவையும் அடுத்த நிலையில் நெருக்கடியை உருவாக்கிவரும் ஜப்பானுடனும், சீனாவுடனும் ஒப்பிடும்போது வறிய நாடுகள் அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு முண்டு கொடுப்பவையாக உள்ளன.

எனவே அமெரிக்காவின் மேலாதிக்கமும், வல்லரசுத்தனமும் வறிய நாடுகளின் ஒத்துழைப்பினாலேயே சாத்தியப்படுகின்றது. வறிய நாடுகளின் பொருளாதார, இராணுவ, அரசியல் உறவுகீளினாலேயே அமெரிக்க ஆதிக்கம் நிலைபெறுகின்றது. ஆனால், அமெரிக்கா வறிய நாடுகளின் மீதுஆதிக்க விஸ்தரிப்பு அரசியலையும், அடக்குமுறையையும் பிரயோகித்து வருகிறதென்ற மறுவளமான சிந்தனை வறிய நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கு ஏற்படவில்லை. அதுவே அமெரிக்காவின்பலமாகும்.

**காலணித்துவம் என்ற அடக்கு முறையினால் பிரித்தானியர் மேற்கொண்ட அணுகுமுறைகளை அமெரிக்கா வறிய நாடுகள் மீது தற்போது மேற்கொள் கின்றது. வெளிப்படையாகப் பார்த்தால் அமெரிக்க உறவு ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் போதிப்பதாக அமையும் அடிப் படையில் அவ்வாறான எதுவுமற்ற போலியான உறவுமுறையாகவே உள ளது. சுரண்டலை இலக்காகக் கொண்ட வெளி நாட்டுக் கொள்கையில் வறிய நாடுகள் பேரம் பேசலை அதிகம் கொண்டிருக்காதவை என்பது டன், அமெரிக்க அதிகா ரத்துக்கு முன் முரண்பிடிக்க முடியாத அரசுகளாக வறிய நாடுகள் காணப் படுவதும் அமெரிக்காவுக்குச் சாதக மாக வுள்ளது.**

## அமெரிக்க விமானங்கள்
# பலூஜாவில் ஏவுகணைத் தாக்குதல் 22 பொதுமக்கள் பலி பலர் காயம்



ஈராக்கின் பலூஜா நகரில் நேற்று முன்தினம் அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 22 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்க விமானங்கள் முதலாவது ஏவுகணைத் தாக்குதலை நடாத்தி அதில் உயிரிழந்த, காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டவேளை இரண்டாவது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால், சேதங்கள் பெருமளவில் அதிகரித்தது.

ஈராக்கிலுள்ள அல்கொய்டா அமைப்பின் தலைவர் அபுமுசாப் அல் - சவாரியின் உறுப்பினர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது தாம் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

சனிக்கிழமை காலை அமெரிக்க விமானங்கள் இரண்டு ஏவுகணைத் தாக்குதல்களை பலூஜாவில் உள்ள மிகவும் வறுமையான மக்கள் வாழும் பகுதியில் நடத்தியதாக அந்தப் பகுதியில் வாழும் மக்கள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலினால் அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் பாரிய சேதமடைந்த நிலையில் இருப்பதனை எடுத்த புகைப்படங்கள் உறுதி செய்தன.

மீட்புப் பணியாளர்கள் இதுவரை சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள் என 22 பேரின் உடல்களை மீட்டுள்ளனர். அத்துடன், இடிபாடுகளுக்கிடை யில் சிக்கி யாராவது உயிருடன் இருக்கின்றார்களா என மீட்புப் பணியாளர்கள் தேடிவருகின்றனர்.

ஆனாலும், பாக்தாத்தில் உள்ள அமெரிக்க இராணுவப் பிரிகேடியர் மார்க் இம்மின் தெரிவிக்கையில் தாக்குதல் நடத்தப்பட்ட வீடு அல் கொய்டா உறுப்பினர்கள் தங்கியிருந்த வீடெனவும் -

சரியான தகவலின் அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் தெரிவித்தார்.




# அல் மொக்ரீன் கொல்லப்பட்டமை பெரிய வெற்றியென்கிறது சவுதி

அல்கொய்டா அமைப்பின் சவுதிக்கான தலைவர் சவுதிப் படையினரால் கொல்லப்பட்டமையானது, மிகப்பெரிய வெற்றியென வொஷிங்டனில் உள்ள சவுதியின் முக்கிய அதிகாரி தெரிவித்தார்.

சவுதிக்கான அல்கொய்டா அமைப்பின் தலைவரான அப்துல் அசிஷ் அல் மொக்ரீனை கொன்மை அல்கொய்டா அமைப்பின் சவுதிக்கான இயங்குதளம் வரும் காலத்தில் செயற்படமுடியாதளவுக்கு அழிக்கப்பட்டுள்ளதாக, சவுதியின் வெளிவிவகார ஆலோசகர் அடெல் அல் யூபியர் தெரிவித்தார்.

இதேவேளை, அல் மொக்ரீன் கொல்லப்பட்டமையை முன்னர் மறுத்திருந்த அராபிய இணையத்தளம் தற்போது அவரும், அவருடன் இணைந்த மற்றைய மூவரும் கொல்லப்பட்டமையை உறுதிசெயதது.

இதேவேளை, முஜாகுதீன் அமைப்பு தனது ஜிகாத் நடவடிக்கை தொடரும் எனவும், இவர்கள் நால்வரும் கொல்லப்பட்டாலும் தமது அமைப்பு பலவீனமானதாக மாட்டாது எனவும், எதிர்காலத்தில் புனிதப்போர் அதிகரிக்கும் எனவும் இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது.

# நேபாளத்தில் பொலிஸ் வாகனம் மீது கண்ணிவெடித் தாக்குதல் 18 பேர் பலி



நேபாளத்தில் மாவோ கிளர்ச்சிவாதிகள் பொலிஸ் வாகனம் மீது நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 14 பொலிஸார், 4 பொதுமக்கள் உட்பட 18 பேர் கொல்லப்பட்டதுடன் பெருமளவான பொதுமக்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நேபாளத்தில் உள்ள மேற்கு நகரமான டங்கோலாவில் இடம் பெற்றது.

பொலிஸாரின் வாகனம் சென்று கொண்டிருந்தவேளை, தீவிரவாதிகள் கண்ணிவெடித் தாக்குதல்களை நடத்தியதாகவும், இதன் பின்னர் இரு பகுதியினருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் சிக்கி பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சக்தி வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதன் பின்னர் இரண்டு மணிநேரமாக துப்பாக்கிச் சண்டை இடம் பெற்றதாகவும் நேபாளிய வானொலி தெரிவித்தது.

சம்பவத்தில் 14 பொலிஸார் ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன், கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கிய பொலிஸாரின் வாகனத்திற்குப் பின்னால் வந்த பயணிகள் பஸ்ஸில் இருந்த நால்வர் இரு பகுதியினருக்குமிடையிலான துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸார் மற்றும் பொதுமக்களென 27 பேர் படுகாயமடைந்த நிலையில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு இராணுவத்தினரும், விமானப் படையின் ஹெலிகொப்டர்களும் சென்று தாக்குதலை மேற்கொண்ட போது கிளர்ச்சிவாதிகள் தப்பியோடிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் கிளர்ச்சிவாதிகளுக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பான விபரங்கள் வெளியாகவில்லை.

# பிரிட்டன் எதிர்க்கட்சி குழுமீது இஸ்ரேல் படையினர் தாக்குதல்

பலஸ்தீன காஸா பகுதியில் ஐ.நா.தலைமையில் சென்ற பிரிட்டன் எதிர்க்கட்சியைச் சேர்ந்த குழு மீது இஸ்ரேல் படையினர் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

பிரிட்டன் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஹவ் இறன்கா டேவிஸ் மற்றும் கிறிஸ்பின் பிளின்ட் ஆகிய இருவர் மீதுமே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காஸாவின் ரபா பகுதியில் சென்றவேளை, இஸ்ரேல் படையினர் தம்மீது துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டதாகவும், அந்த துப்பாக்கி வேட்டு தமது தலையில் இருந்து பத்து அடிக்கு மேலாகச் சென்று, அருகிலுள்ள கட்டடத்தைத் தாக்கியதாகவும், லிபரல் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த பியர் பரோனஸ் நோத் ஓவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் மூலம் எம்மை கொலை செய்யவே முயற்சி செய்திருக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.


# கரும்புலிகள் நாளையொட்டி
## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடாத்தும்
## - சிறுகதை, கவிதை போட்டிகள் -

I) சிறுகதை (பொதுவானது)
II) கவிதை (பாடசாலை மாணவர்களுக்கானது)

**நிபந்தனைகள்**

1) தேசவிடுதலை உணர்வினை மையமாகக்கொண்டு ஆக்கங்கள் எழுதப்படல்வேண்டும்.
2) சிறுகதை 05 - 07 வரையான பக்கங்களுக்கு மேற்படாமலும், கவிதை 20 தொடக்கம் 50 வரிக்குட்பட்டதாகவும் அமைதல்வேண்டும்.
3) பாடசாலை மாணவர்களின் படைப்புக்களை பாடசாலை அதிபர்/வகுப்பாசிரியர் உறுதிப்படுத்தல் வேண்டும்.
4) ஆக்கங்கள் அனைத்தும் 01.07.2004 க்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுதல்வேண்டும்.
5) வெற்றிபெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும், பாராட்டுச் சான்றிதழ்களும் கரும்புலிகள் நாளன்று வழங்கப்படும்.

ஆக்கங்களை நேரடியாகவோ, தபால்மூலமாகவோ அனுப்பிவைக்கலாம். அனுப்பவேண்டிய முகவரி

கரும்புலிகள் நாள் போட்டி,
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை
*பரமேஸ்வராச் சந்தி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

(சி-2682) - சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை -



# நல்லூர் பிரதேசசபை
## வேலைகளிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேசசபையினால் ( ICTAD) தரம் M-9 பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 21.06.2004ஆம் திகதி தொடக்கம் 01.07.2004 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி : 05.07.2004 ந.ப.12.00 மணிவரை.
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 05.07.2004 பி.ப.2.00 மணி. (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேசசபைக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
06. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | கேள்வி வைப்புக் கட்டணம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | வற் வரி |
|---|---|---|---|---|
| 01 | சரஸ்வதி மில் ஆலை வீதி, கல்லிட்டுத் தாரிடல் | 3700.00 | 500.00 | 75.00 |
| 02 | வீரபத்திரர் வீதி கல்லிட்டுத் தாரிடல் | 2500.00 | 500.00 | 75.00 |
| 03 | உயரப்புலம் பாடசாலை முன் வீதி, கல்லிட்டுத்தாரிடல் | 2500.00 | 500.00 | 75.00 |

நல்லூர் பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
திருநெல்வேலி.

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

18.06.2004

(சி/2680)



நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், தேவயாணி நடித்த
வல்லரசு
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு 8.45 (பு.நே) General daughter
(சி-2621)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி (நீல்ஸ்)



22 வரை மட்டும்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-2622)

ராஜா யாழ்ப்பாணம்.
விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த



அருள்
காட்சிநேரம்:-10.30,2.30,6.30மட்டும் (பு.நே)
(சி-2623)



# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உலகக் கடல்சார் மீன்பிடிப் பகுதிகளில் 70 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் தாக்குப்பிடிக்கக்கூடிய எல்லைவரை அல்லது அதற்கு அப்பால் பிடிக்கப்படுகிறது.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஊடகவியலாளர் நடேசனுக்கு லண்டனில் அஞ்சலிக் கூட்டம்

(லண்டன்)

ஊடகவியலாளரும், நாட்டுப் பற்றாளருமான ஜி.நடேசனுக்கு அஞ்சலிக் கூட்டம் லண்டன் ரூட்டில் சிறி முத்துமாரி அம்மன் கோவில் சிவயோகம் மண்டபத்தில நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

வைத்திய கலாநிதி என்.எஸ். மூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மூத்த பத்திரிகையாளர் சிவநாயகம் மங்கள விளக்கினை ஏற்றிவைக்க, மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

மூத்த பத்திரிகையாளர்களான சிவநாயகம், பொன் பாலசுந்தரம், அஞ்சல் மாலி, மனிதவுரிமை செயற்பாட்டாளர் விசாகன், கரவைக் கவி மற்றும் ஐ.பி.சி. தமிழின் ஒலிபரப்பாளர் எஸ்.கே.இராஜன் ஆகியோர் உரையாற்றினர்.

இலங்கை அரசால் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அனைவரும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தின் இறுதியில் இலங்கை அரசால் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், நாட்டுப்பற்றாளர் நடேசனின் கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## கடற்படை முகாமிட்டிருந்த ஞானிமடம் பகுதியில் எலும்புக்கூடு மீட்பு!

(பூநகரி)

பூநகரி ஞானி மடம் பகுதியில் உள்ள வீட்டு வளவொன்றில் எலும்புக்கூடு ஒன்றை அப்பகுதி மக்கள் மீட்டெடுத்துள்ளனர்.

ஞானிமடம் அரசினர் பாடசாலைகுப் பின்னாலுள்ள சதாசிவம் என்பவரின் காணியை விவசாய நடவடிக்கைக்காக உழுதபோதே இந்த எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரப்பையினுள் கட்டப்பட்ட நிலையில் இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட இந்த எலும்புக்கூட்டுக்கு சமீபமாக பெண்களுக்கான ஆடைகள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் கடற்படையினர் முகாமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறப்புற நேற்று நடைபெற்ற சிங்கள நூல் வெளியீட்டு விழா

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளால் மாதாந்தம் வெளியிடப்படும் தேதுன்ன (வானவில்) என்ற சிங்கள மொழிப் பத்திரிகையல் தொடர்ச்சியாக வெளிவந்த க.வே.பாலகுமார் எழுதிய 'மௌனித்திருந்தவர் மனக்குரல்', தம்பி அப்பா எழுதிய 'வன்னியிலிருந்து ஓர் மடல்', கடிதங்களின் தொகுப்பு ஆகிய இரு நூல்கள் நேற்று வவுனியாவில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

வவுனியா நகரில் அமைந்துள்ள முத்தையா மண்டபத்தில் நேற்றுக் காலை பத்து மணியளவில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தலைமை தாங்கினார்.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை வரவேற்புரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.

வவுனியா கல்வியியற் கல்லூரி அதிபர் பேணாட் வைபவரீதியாக இவ்விரு புத்தகங்களையும் வெளியிட்டு வைக்க பிரபல சிங்களப் பாடகர் ஜயதிலக பண்டார பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை திருநாவுக்கரசு நிகழ்த்தினார். சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார். பதிலுரையை தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

சிங்களப் பாடகர் ஜயதிலக பணடாரவுக்கு க.வே.பாலகுமாரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பேராசிரியர் சுசரித ஹம்லத்திற்கு கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை ரத்தினதுரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## புதிய தேர்தலை....

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் நடத்தாமலும், பெரியளவிலான மாற்றத்தை எதிர்பார்க்க முடியாதென்பதால் தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான மாற்றுவழிகள் குறித்து அவர் பரிசீலித்து வருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லண்டனிலிருந்து திரும்பியதும் புதிய தேர்தல் முறையை அமுல்படுத்துவது குறித்த நடவடிக்கையில் இறங்குவார் என்றும், இதன் பின்னர் நாடாளுமன்றை கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிட திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கிணற்றில் வீழ்ந்து மூதாட்டி உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் மூதாட்டி ஒருவர் கிணற்றில் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தங்கராசா தங்கம்மா (வயது 70) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

## கிழக்குக்கான...

விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புலிகளின் கடற்பயணத்துக்கு நிபந்தனைகளுடன் இணக்கம் ஏற்பட்டது.

இதன்படி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கிடையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஹெலியுடன் கடற்பயணத்தை மேற்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்தவாரம் புலிகள் மேற்கொள்ளவிருந்த கடற்பயணத்தை தடுத்துநிறுத்துமாறு - கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி உத்தரவிட்டிருந்ததால், இந்தப்பயணத் திட்டத்தை புலிகள் கைவிட்டிருந்தனர்.

கிழக்கில் கடற்புலிகளின் படகுகள் 4 நாட்கள் தங்கியிருப்பதற்கு கடற்படையினர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். 24 மணிநேரத்துக்குள் கிழக்கிலிருந்து படகுகள் திரும்பி விடவேண்டும் என்றும்,

இவ்வாறு படகுகளும், போராளிகளும் தரித்திருப்பது கிழக்கின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என்றும், கடற்படை தெரிவித்திருந்தது. கடற்படையினரின் இந்த நிபந்தனைக்கு புலிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தபோதும், தற்போது இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மல்வத்த பீடத்துக்கு புதிய மகாநாயக்கர்!

### போட்டியின்றித் தெரிவு

(கொழும்பு)

மல்வத்த பீடத்தின் 26 ஆவது மகாநாயக்கராக அனுநாயக்கரான, குருநாகல் ரிதி மகாவிகாரையின் பிரதம குருவான வண. திபுருவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரோ போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

சியாம் மகாநிகாயவின் மல்வத்த பீட கரகசங்கசபாவின் கூட்டம் நேற்று மாலை இடம்பெற்றபோதே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

மல்வத்த மகாவிகாரையில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் இரண்டு அனுநாயக்கர்களான வண அம்பன்வெல சிறி பள்ளசேகர தேரோ, வண திபுருவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் ஆகியோரின் பெயர்கள் ஆராயப்பட்டே இந்த தெரிவு இடம்பெற்றது.

## கருணாவுக்கு அரசபடையினர்...

இந்தக் காலத்தில் உண்மையில் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட முனைந்துகொண்டிருக்கிறது. ஏற்கனவே இதுபற்றி ஏதோவிதமான பேசசுக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட நிலையில் எந்தவொரு பொறுப்பான அரசாங்கமும் யுத்தத்தை ஆரம்பிக்க முனையும் என நான் நினைக்கவில்லை.

அமைதிப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் உண்மையில் இதற்கான பதில் அரசியல் மட்டத்தில் இருந்துதான் சொல்லப்படவேண்டும். அதில் நிர்வாக மட்டத்தைப் பொறுத்தவரை, என்னைப் பொறுத்த மட்டில் அப்படிக் குற்றச்சாட்டு விடயம் தொடர்பாக அது எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

*சந்தேசய :-* இலங்கையில் மேற்கே தொப்பிகல பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் சண்டை நடப்பதாக செய்திகள் இதுபற்றி?

*சிறில் ஹேரத் :-* தொப்பிகல பகுதியில் சண்டை நடந்திருப்பதாக செய்திகள் கிடைத்திருக்கின்றன. அவை உள்ளூர் பத்திரிகையில் ஊடகங்கள் அளவுக்கதிகமாக பெரிதுபடுத்தி சொல்லிக் கொள்கின்றன. பொட்டு அம்மான், ரமேஷ் போன்ற முக்கியமான விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

அது முழுமுழுக்க தவறானது. எங்களுக்கு அப்படி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. ஆனால், சிறிய அளவில் மோதல் நடந்திருக்கலாம் என்றும் அதில் கொஞ்சப் பேர் (ஏழு எட்டுப்பேர்) கொல்லப்பட்டிருக்கலாம் என எங்களுக்கு தகவல் வந்திருக்கிறது.

நிச்சயமாக இந்த விடயம் அளவுக்கதிகமாக பெரிதாக மிகைப்படுத்தப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறது.


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் பொது முகாமையாளராகப் பணியாற்றும் சிவபாலசுப்பிரமணியத்தின் துணைவியார் வசந்தராணி நேற்றுக் காலமானார்.

இவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்.
யாழ்.மாவட்ட கூட்டுறவு
கிராமிய வங்கிகளின் சமாசம்,
கே.கே.எஸ்.வீதி - யாழ்ப்பாணம்.

(சி-2683)


## கருணாவின் செயற்பாடு...

மறுத்து எங்களை வைத்திருந்தார். இதனால், நாங்கள் தொடர்ந்து அவருக்கு - பெற்றோரிடம் எங்களை ஒப்படைக்கும்படி அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தோம்.

அவர் சொன்னார் - தான் சில ஒழுங்குகள் செய்வதாகவும், அந்த ஒழுங்குகள் சரி வந்ததும் எங்களை அனுப்புவதாகவும் கூறியிருந்தார். நீண்ட நாட்களின் பின்னர் நாங்கள் கடுமையான அழுத்தத்தின் மத்தியில் அவரின் செயற்பாடுகள் பிடிக்காததால் நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மீண்டும் இணைந்துள்ளோம்.

*கேள்வி:-* பொதுவாக அவர் அங்கு யாரும் அழுத்தம் தராமலே விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மீண்டும் செல்ல நினைப்பவர்கள், அந்தப் பக்கம் போகலாம் என்று திருப்பி அனுப்பியதாகவும் சொல்லப்படுகிறதே...?

*பதில்:* அது முதல் அப்படி இருந்தது. ஆனால், இப்போது திரும்பிப் போகும்படி அவராகவே எவரையும் அனுப்பவில்லை. நாங்களாகத்தான் எங்கள் பெற்றோரிடம் போகப்போவதாகச் சொல்லிவிட்டுத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சேர்ந்திருந்திருக்கிறோம்.

*கேள்வி:* எங்கே இருந்தீர்கள்.

*பதில்:* கொழும்பில்.

*கேள்வி:* இப்போது அவர் எந்த இடத்தில் இருக்கிறார்.

*பதில்:* தற்போது நாங்கள் வரும் வரைக்கும் எங்களுடன் இராணுவத்தினரின் பாதுகாப்பில்தான் அவரும் இருந்தவர். அதேநேரம் நாங்கள் அங்கேதான் இருந்தோம்.

பிறகு அவர் வேறு இடத்திற்குப் பிரிந்து சென்றவுடன் நாங்கள் அங்கிருந்து ஏதோவொரு வகையில் தப்பி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்துள்ளோம்.

*கேள்வி:* பாதுகாப்புச் செயலரிடம் பேசினோம். அவர், அந்தக் குற்றச்சாட்டை முழுமையாக மறுத்ததுடன், இராணுவத்தின் ஆதரவுடன் கருணா இல்லை என்று தெரிவித்திருக்கிறாரே...?

*பதில்:* அப்படி இனியும் இலங்கை இராணுவம் மறுக்க இயலாது. நாங்களும் அங்கிருந்துதான் வந்திருக்கிறோம். அப்படியானால் நாங்களே அதை உறுதிப்படுத்துகிறோம் என்று தெரிவித்தார்.





## மெகா

குறிப்பிட்ட அனுமதிகளே உள்ளதால்
கணனி உயர்கல்விக்கான
புலமைப்பரிசில் பெற்றவர்கள்
உடன் தமது பதிவுகளை
மேற்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கிறோம்.

ASIAN COMPUTERS

யாழ்ப்பாணம்-சுன்னாகம்-நெல்லியடி


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.